

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

ஆண்டு அறிக்கை

2021

சுருக்கப் பெயர்கள்

CoA	காணாப்படாமைக்கான சான்றிதழ்
CoD	மரணப் பதிவுச் சான்றிதழ்
CoI	விசாரணை ஆணைக்குழு
CTF	ஆலோசனைச் செயலணி
DNA	தேசிய சுவடிக்கூடத் திணைக்களம்
EU	ஐரோப்பிய ஒன்றியம்
GSP	பொதுவான தெரிவுத் திட்டம்
ICRC	சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு
INGOs	சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள்
MIA	காணாமற்போன படையணியினரும் நடவடிக்கைகளின் போது காணாமற் போனமையும் வலிந்து காணாமலாக்கப்படுதலும்
MoFA	வெளிநாட்டலுவல்கள் அமைச்சு
MoJ	நீதி அமைச்சு
MoU	புரிந்துணர்வு ஒப்பந்தம்
MSD	முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
NGOs	அரசசார்பற்ற நிறுவனங்கள்
OMP	காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம்
PC	ஜனாதிபதி சட்டத்தரணி
RTI	தகவலறியும் உரிமை
SLIDA	இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்
UN	ஐக்கிய நாடுகள் சபை
UNWG	ஐக்கிய நாடுகள் சபைச் செயற்பாட்டுக் குழு
UNWGIED	வலிந்து காணாமலாக்கப்பட்டமைக்கான ஐக்கிய நாடுகள் சபைச் செயற்பாட்டுக் குழு
WGIED	வலிந்து காணாமலாக்கப்பட்டமைக்கான செயற்பாட்டுக் குழு
	தவிசாளரது செய்தி

தவிசாளரின் வாழ்த்துச் செய்தி

2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்ட காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் நிலை பற்றிய உண்மையை வெளிக்கொணர்வதற்கான முக்கிய நகர்வாகக் கொள்ளப்படுகின்றது. காணாமல் போனோரின் நிலையினை வெளிக்கொணர்வதற்கான துல்லியமான ஆணை சட்டவாக்கம் மூலமாக இவ்வலுவலகத்துக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றப் பேரவையினால் பரிந்துரைக்கப்பட்ட 07 உறுப்பினர்களை இவ்வலுவலகம் கொண்டுள்ளது. அவ்வுறுப்பினர்கள் நிலைமாறுகால நீதி, காதி நீதி முறைமை, பொது மக்களின் மனக்குறைகளைக் கையாளும் நடைமுறை போன்ற துறைகளில் தத்தமது நிபுணத்துவத்தினை அடிப்படையாகக் கொண்டே நிமனம் செய்யப்பட்டுள்ளனர். கடின உழைப்பின் பெறுபேறாக, காணாமல் போனோரின் பட்டியலை வெளியிடுவதற்கும் விசாரணைகளைத் துவங்குவதற்கும் இவ்வலுவலகத்தால் இயலுமாக இருந்தது.

இவ்வருடத்தில், பலதரப்பட்ட விடயங்களில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் முன்னேற்றம் கண்டது. குறிப்பாக, அலுவலக நடவடிக்கைகளில் முன்னேற்றம், காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களை நாடிச் செல்லல் போன்றவற்றில் முன்னேற்றம் கண்டது. மேலும், இவ்வலுவலகம் மிக முக்கியமான பல்வேறுபட்ட சட்டரீதியான தலையீடுகளையும் கொள்கைரீதியான தலையீடுகளையும் மேற்கொண்டுள்ளதுடன் தனிநபர் விசாரணைகளையும் மேம்பட்ட முறையில் மேற்கொண்டுள்ளது. குறிப்பிடத்தக்க வகையில் அமைந்த பலவகையான முறைப்பாடுகள் தொடர்பிலான தகவல் ஆராய்ச்சிகளை இவ்வலுவலகம் தயாரித்தும் அடைந்தும் உள்ளது. 2018 யூன் முதற்கொண்டு, 11 மனிதப் புதைகுழிகளை அகழ்வதற்கான அவதானிப்பாளராக இவ்வலுவலகம் செயற்பட்டுள்ளதுடன் விசாரணைகளில் பொது மக்களின் நம்பிக்கையினை உறுதிப்படுத்துமுகமான நடவடிக்கைகளை முன்வைத்தும் நிதியுதவியினை வழங்கியும் உறுதுணை புரிந்துள்ளது. முறைப்பாடுகளைக் கவனத்திற்கொள்ளும் வகையில், இவ்வலுவலகத்தின் பிராந்திய அலுவலகம் கிளிநொச்சியில் இக்காலப்பகுதியில் திறக்கப்பட்டது. அது குறிப்பிடத்தக்களவிலான சேவைகளுக்கும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளுக்கும் துணைபுரியும். இப்புதிய அலுவலகத்துடன் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் இதுவரையில் 5 பிராந்திய அலுவலகங்களைக் கொண்டுள்ளது. இவ்வலுவலகத்தின் ஓர் அங்கமாகிய காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் காணாமலாக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச நினைவு தினத்தை அமைச்சர்கள், சிவில் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள், காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் போன்றவர்களின் பங்குபற்றுதலுடன் இலங்கையிலும் நினைவுகூரல் நிகழ்வொன்றை இவ்வலுவலகம் இணையவழியில் நடாத்தியது.

மேலும், குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம், குடிவரவு மற்றும் குடியகல்வு தினைக்களம், (பிறப்பு, இறப்பு) பதிவாளர் நாயகத்தின் தினைக்களம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், அமைச்சுகள் போன்றவற்றுடன் பணியாற்றவை இவ்வலுவலகம் கொண்டுள்ளதுடன் இரட்டை முறைப்பாடுகள், பல்வகை முறைப்பாடுகள் போன்றவற்றுடன் தொடர்புபட்ட சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் இணைந்து பணியாற்றுகின்றது. ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட பிரதிநிதிகள் குழு காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்துடனும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளது. GSP+ வணிகச் சலுகையின் கைம்மாறாக இலங்கை 27 சர்வதேச சமவாயங்களுடன் உடன்படவேண்டியுள்ளதனை மதிப்பீடு செய்யும் வகையில் அது அமைந்தது. அச்செயன்முறையின் வெற்றிக்கும் முன்னேற்றத்துக்குமான மகத்தான பங்களிப்புக்கு அப்பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது. சர்வேத செஞ்சிலுவைச் சங்கக் குழாம், இராஜாங்கக் குழுக்கள், நன்கொடை முகவர்கள், தூதுவராலயங்கள் போன்றவற்றுடன் மேற்கொண்ட சந்திப்புகள் கடந்த ஆண்டில் காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் கண்ட மிகமுக்கியமான முன்னேற்றம் ஆகும்.

சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தை மீறியுள்ளமை சர்வதேச மனிதநேய சட்டத்தை மீறியுள்ளமை குறித்து ஒரு ஆணைக்குழு அதற்கு முந்தைய ஆணைக்குழுவை ஆராய்வதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறு காணப்படுகின்ற பட்சத்தில் அம்முந்தைய ஆணைக்குழுவின் பொறுப்புக்கூறல் பரிந்துரைகள் ஏதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்று கண்டறிவதும் எதிர்காலத்தில் பொறுப்புக்கூறல் நோக்கங்களை எட்டிக்கொள்வதற்கு எத்தகைய

நடவடிக்கைகள் அவசியமாகின்றன என்பதைக் கண்டறிவதும் அவ்வாணைக்குழுவின் பொறுப்பாகும்.

மேலும், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பணிகளை ஆற்றுவதற்கு உகந்த சூழலை உருவாக்குவதற்கான முயற்சிகளையும் இவ்வலுவலகம் எடுத்துள்ளது. அது அலுவலகத்துக்கு மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து புதிய முறைப்பாடுகளையும் பேணிவருவதுடன் அவ்வாறான நிகழ்வு மீண்டும் நடைபெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்குமாக அமையும். அதற்கேற்ப, வலிந்து காணாமலாக்கப்பட்டமை தொடர்பில் எதுவித முறைப்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதைக் கடந்த 12 மாதங்களினதும் பதிவுகள் காட்டிநிற்கின்றன.

கொவிட்- 19 கொள்ளை நோய் மூலம் ஏற்பட்ட தடைகளைத் தாண்டியும் இலங்கையில் நல்லிணக்கத்தை ஈட்டிக்கொள்வதற்கு காணாமல் போன மற்றும் காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்பங்களது உரிமைகள் உண்மையாகவும் நீதியான முறையிலும் உணரப்பட வேண்டும் என்று காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நம்பிக்கை கொள்கின்றது. அதற்காக காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம், நிர்வாகக் குழு உறுப்பினர்கள், ஊழியர்கள், சிவில் சமூக அமைப்புகள், காணாமல் போன ஆட்களின் குடும்பங்கள், பங்குதாரர்கள் போன்றோர் வருங்காலத்தில் வரப்போகின்ற ஆணைக்குழுக்களும் அதிகாரிகளும் இவ்வலுவலகத்தின் கடப்பாட்டினை முழுவீச்சில் நடைமுறைப்படுத்துவதற்கான உறுதியான அடித்தளத்தை இட்டுள்ளனர் என்பதுடன் இவ்வலுவலகம் பணிகளையும் கருமங்களையும் ஆற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அரச முகவர்களும் திணைக்களங்களும் பூரண ஒத்துழைப்பை நல்கும்.

தவிசாளர்
காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

1. முன்னுரை

காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது இலங்கைச் சமூகத்தின் பாதிக்கப்படத்தக்க பகுதியினர் மீதான விசேடமாக ஏப்ரலில் காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்ட குடும்பங்கள் மீதான கடும் பாதிப்புகளை இனங்கண்டு கொவிட் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அவர்களது நிலவரங்களைக் கவனத்திற் கொள்வதற்குரிய சிபார்சுகளை மேன்மை தங்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களுக்குத் தெரியப்படுத்தியது.

மேலும் ஜனாதிபதி செயலணியைத் தாபித்த மார்ச் 6 ஆம் திகதிய ஆம் இலக்க வர்த்தமானியின் 11 ஆவது பந்தியில் "மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பெண்கள் வருமானங் குறைந்த குடும்பங்கள் மற்றும் நேரடியாக அபாயத்துக்குட்பட்டுள்ள ஆட்கள் ஆகியோர் மீது கவனஞ்செலுத்தப்படுதல்" பற்றி அச்செயலணிக்குக் குறித்த ஆணை வழங்கப்பட்டுள்ளமையானது யினது கவனத்திற்குத் தெரிய வந்தது.

காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டுக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களிடையே வயது முதிர்ந்த மற்றும் பெண் தலைமைத்துவக் குடித்தனங்கள் தமது குடும்ப அங்கத்தவரது நாளாந்த உழைப்பில் தங்கியிருக்கின்றமையை அவதானித்தது. நாட்டில் தற்போது காணப்படுகின்ற நிலவரம் தமது ஜீவனோபாயத்தைக் கொண்டு நடாத்த முடியாத மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட சொத்துக்களையுடைய அல்லது சொத்துக்களைக் கொண்டிராத இவ்வாறான குடும்பங்கள் மீது மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டுக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் தற்போதைய நெருக்கடிக்காக உணவு மற்றும் நிதியுதவிகள் வழங்குதல் உள்ளிட்ட முன்வைக்கப்பட்டுள்ள ஏதேனும் நிவாரண நடவடிக்கைகளுள் உள்ளடக்கப்பட வேண்டும் என சிபார்சு செய்துள்ளது. குறிப்பாக குறுகிய கால நடவடிக்கையாக காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டுக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கு கிராம அலுவலர் ஊடாக உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்கு சிபார்சு செய்துள்ளது. கிராம அலுவலர்கள் ஏற்கனவே தமது பிரிவுகளில் காணாமற்போன மற்றும் காணாமலாக்கப்பட்டுக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் பற்றிய தகவல்களைச் சேகரித்துள்ளனர். அவ்வாறான பட்டியல்கள் பாதிக்கப்பட்ட ஆட்களுக்கான மற்றைய அரச உதவித் திட்டங்களின் கீழ் பயனாளிகளாகவுள்ள அவ்வாறான குடும்பங்கள் மீண்டும் பயன்பெறுவதைத் தவிர்க்க உதவும். 2021 இல் இவ்வாறான நிவாரண வேலைகளில் ஈடுபட்டிருந்ததுடன் அதில் ஒருங்கிணைப்பையும் மேற்கொண்டிருந்தது.

2. அறிமுகம்:

2016 இன் 14 ஆம் இலக்க காணாமற் போனோர் பற்றிய அலுவலகச் சட்டமானது, இலங்கையில் காணாமற் போனோர் குறித்த செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக 2016 ஆகஸ்ட்டில் ஆக்கப்பட்டது. காணாமற் போனோரைத் தேடிக் கண்டுபிடித்தலுக்கான ஏற்பாடுகளை வழங்கும் ஒரு சட்டமாக, காணாமற் போனோரது உறவினருக்கு உதவிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ள ஒரு சட்டமாக, காணாமற் போனோர் பற்றிய தரவுத்தளமொன்றைப் பேணுவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ள ஒரு சட்டமாக, வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கும் செயற்பாடுகளுக்கும் செயன்முறைகளையும் வழிகாட்டுதல்களையும் அமைக்கும் ஒரு சட்டமாக, இவ்விடயங்களோடு தொடர்புபட்டவற்றை மற்றும் அவற்றின் இடைநேர் விளைவுகளுடன் தொடர்புபட்டவற்றை நடைமுறைப்படுத்தும் ஏற்பாடுகளைக் கொண்ட ஒரு சட்டமாக இது உள்ளது. காணாமற்போன ஒருவர் எந்தக் காலகட்டத்தில் காணாமற்போனார் என்பது எவ்வாறாக இருப்பினும், OMP ஆனது அவரையும் உள்ளடக்க முடியும்.

காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகமானது, அரசியலமைப்புச் சபையால் சிபார்சு செய்யப்பட்டு, இலங்கை ஜனாதிபதியால் மூன்று வருடங்களுக்காக நியமிக்கப்பட்ட, ஏழு அங்கத்தவர்களைக் கொண்ட குழுவைக் கொண்டுள்ளது. OMP அலுவலகத்திற்கான இவ்வாறான அங்கத்தவர்களது நியமனம், அது இலங்கையின் பன்முகத்தன்மையான சமூக அமைப்பைப் பிரதிபலிப்பதை உறுதிப்படுத்துவதாக உள்ளது. OMP யின் அங்கத்தவர்கள் முன்னைய அனுபவங்களைக் கொண்டவர்களாக உள்ளதுடன், விசாரித்துக் கண்டுபிடிப்பதில், மனித உரிமைச் சட்டங்களில், சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களில், மனிதாபிமானத்தை மதிப்பதில்

தகைமை பெற்றுள்ளவர்களாக இருப்பதுடன், OMP யின் செயற்பாடுகளைக் கொண்டு நடாத்துவதில் தேவையான ஏனைய தகைமைகளைக் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

உயர் நீதிமன்றின் ஓய்வுபெற்ற நீதியரசரான திரு. உபாலி அபேரத்ன அவர்கள், 2021 டிசெம்பர் வரை OMP இன் தவிசாளராக இருந்து, பின்னர் தகவலறியும் உரிமை ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்பட்டார். புதிய தவிசாளராக, OMP யின் அங்கத்தவராக இருந்த திரு. மகேஷ் கட்டுலந்த (சட்டத்தரணி) 2021 டிசெம்பர் 16 ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டார். இந்த அறிக்கைக்குரிய காலகட்டத்தினுள், OMP யின் முன்னைய அல்லது முதலாவது அங்கத்தவர்கள் தமது பதவிக்குரிய காலத்தைப் பூர்த்தி செய்ததுடன், மேன்மை தங்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களால் புதிய அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். அதன்படி, திரு. விஜேகோன் பண்டார கணேகல, திரு. தம்பிஐயா யோகராஜா, திருவாட்டி. சித்தி டேன் அர்பா தாசிம், திரு. ஜயந்த விக்ரமரட்ண ஆகியோர் டிசெம்பர் 2021 இல் புதிய அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டதுடன், 2021 டிசெம்பர் 23 இல் திரு. சிராஸ் எம். நூர்தின் புதிய அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

OMP யின் தலைமை அலுவலகம் இல. 408, காலி வீதி, கொழும்பு 03, இலங்கை என்ற முகவரியில், 011 2301685 என்ற தொலைபேசி இலக்கத்தைக் கொண்டு, 011 2301921 என்ற தொலைநகல் இலக்கத்தைக் கொண்டு அமைந்துள்ளதுடன், யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, மாத்தறை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் பிராந்திய அலுவலகங்களையும் கொண்டுள்ளது. பொதுமக்களும் பாதிக்கப்பட்ட குடும்பங்களும் இலகுவாக அணுகுவதற்காக, நான்கு பிரதேச அலுவலகங்களையும் எட்டு பிரதேச உப அலுவலகங்களையும் அமைப்பதை OMP இலக்காகக் கொண்டுள்ளது. பிரதேச அலுவலகங்கள் பற்றிய விபரங்கள் இனிவரும்

3.2016 இன் 14 ஆம் இலக்க OMP சட்டத்தின் குறிக்கோள்கள்:

பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்காக அவசியமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன:

அ) காணாமற்போனோரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக உரிய பொறிமுறைகளை வழங்குதலும், அவர்கள் காணாமற்போன நிலைமைகளை ஆராய்தலும் அவர்களது நிலைமையைத் தெளிவுபடுத்துதலும்;.

ஆ) இந்தச் சட்டத்தின் எல்லைக்குள் ஆட்கள் காணாமற்போதலைக் குறைப்பதற்கும், அவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கும், உரிய அதிகார பீடங்களுக்கு முன்மொழிவுகளைச் செய்தல்;

இ) இந்தச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு காணாமற் போனோரதும் அவர்களது உறவினர்களதும் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாத்தல்;

ஈ) அவர்களுக்கான பரிகாரங்களுக்கான வழிவகைகளை அடையாளங் காணுதல்.

4.ஆணை:

பின்வருவனவற்றிற்கு OMP ஆணையைப் பெற்றுள்ளது.

அ) காணாமற்போனோரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக உரிய பொறிமுறைகளை அடையாளங் காணுதலும், அவர்கள் காணாமற்போன நிலைமைகளை ஆராய்தலும்;

ஆ) காணாமற்போகும் சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கும், உரிய அதிகார பீடங்களுக்கு முன்மொழிவுகளைச் செய்தல்;

இ) இந்தச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு காணாமற் போனோரதும் அவர்களது உறவினர்களதும் நலன்களையும் உரிமைகளையும் பாதுகாத்தல்;

ஈ) காணாமற்போனோரும் அவர்களது உறவினரும் பெற வேண்டிய பரிகாரங்களுக்கான வழிமுறைகளை அடையாளங் காணுதலும், காணாமற்போனோருக்கு (அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால்) அல்லது அவர்களது உறவினருக்கு அதனை அறியத்தருதலும்;

உ) தற்போது மேற்கொள்ளப்படும் செயன்முறை மூலம் அல்லது, மற்றைய நிறுவனங்களால் அமைப்புகளால் அரச திணைக்களங்களால் மற்றும் விசேட ஜனாதிபதி ஆணைக்குழுவும் விசாரணை ஆணைக்குழுக்களும் ஆகியவற்றால் பெறப்பட்ட தரவுகள் யாவற்றையும் OMP சட்டத்தின் கீழ் தொகுக்கப்பட்ட தரவுத்தளத்தினுள் மையப்படுத்தி, காணாமற்போனோர் பற்றிய தரவுகளுடன் இணைத்தல்;

ஊ) இந்தச் சட்டத்தின் குறிக்கோள்களை அடைவதற்காக, அவசியமான எல்லா மற்றைய விடயங்களையும் செய்தல்,

மேலும், ஒருவர் காணாமற்போன காலகட்டம் எவ்வாறிருப்பினும், அவ்வாறான ஆட்களுக்காக OMP யின் ஆணை நீடிக்கப்பட வேண்டும்

5.அமைப்புக் கட்டமைப்பும் அதிகாரங்களும்:

OMP அதன் குறிக்கோள்களின் பிரகாரமும் ஆணையின்படியும், பதிவாளர் நாயகம் திணைக்களத்திலிருந்து காணாப்படாமைக்கான சான்றிதழைப் (CoA) பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் காணாமற்போன ஆட்களது உறவினருக்கு இடைக்கால அறிக்கைகளை வழங்குதல் உள்ளிட்ட பல செயற்பாடுகளுக்கும் கடமைகளுக்கும் பொறுப்பாக்கப்பட்டுள்ளது; காணாமற்போன ஆட்களது உறவினருக்கு சமூக-உளவள உதவிகள் உள்ளிட்ட நலன்புரிச் சேவைகளையும் நிர்வாக உதவிகளையும் வழங்குதல் அல்லது அதற்கு ஒத்தாசையாயிருத்தல்; காணாமற்போன ஆட்களுக்கு அல்லது அவர்களது உறவினருக்கு நட்டஈடுகளை வழங்குவதற்காக உரிய அதிகார பீடத்தினருக்குச் சிபார்சு செய்தல்; பாதிக்கப்பட்டவர்களது மற்றும் சாட்சியாளர்களது பாதுகாப்பிற்கான முறைமையொன்றை உருவாக்கிப் பேணுதல்; காணாமற்போன ஆட்கள் தொடர்பான விடயங்களை உள்ளடக்கிய தரவுத்தளமொன்றை உருவாக்குதல், முகாமைத்துவம் செய்தல், பேணுதல்; காணாமற்போன ஆட்கள் தொடர்பான காரணங்கள், சம்பவங்கள், தாக்கங்கள் பற்றி பொதுமக்களுக்கான அறிவூட்டுதலை மேற்கொள்ளுதலும், காணாமற்போனோரது உறவினருக்கு பொருளாதார, சமூக-உளவள, மற்றும் நிர்வாக உதவிகளுக்காக பொதுமக்களிடையேயிருந்து ஆதரவைப் பெற்றுக்கொள்ள வசதியளித்தலும்.[30]

இவ்வாறான கடமைகளை நிறைவேற்றுவதற்காக, விதிகள் மற்றும் பாலின ரீதியான வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை உருவாக்குதல், ஆளணியினரை நியமித்தலும் நீக்குதலும், பயனுறுதியான நடவடிக்கைகளுக்கான தனது அலகுகளைத் தாபித்தல் ஆகியவற்றுக்கான பொதுவான அதிகாரங்களை OMP கொண்டுள்ளது[31]. இந்த அறிக்கைக்குரிய காலகட்டத்தில், OMP பின்வரும் அலகுகளுடன் தொழிற்பட்டது:

1. பாதுகாக்கும் அலகு
2. சட்டம், கொள்கை மற்றும் ஆராய்ச்சி அலகு
3. பாதிக்கப்பட்ட மற்றும் குடும்பத்தினருக்கான ஆதரவு அலகு
4. தரவு முகாமைத்துவ அலகு
5. நிதி மற்றும் கொள்வனவு அலகு
6. மனிதவள மற்றும் நிர்வாக அலகு

தொடர்பாடல், அடைவு, தேடுதலும் புலனாய்வும் ஆகியவற்றுக்கான அலகுகளை அமைப்பதற்காக, ஏற்கனவே இருந்த மற்றைய அலகுகளுடாக அவ்விடயங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் கூட, 2021 ஆம் ஆண்டில் OMP கலந்துரையாடல்களை நடாத்தியது. இலங்கைக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் கீழ், இலங்கையிலுள்ள ஐ.நா. அலுவலகத்தின் ஆதரவுடன் சட்டம், கொள்கை மற்றும் ஆராய்ச்சி அலகு செயற்படுகின்றது. இந்த ஒப்பந்தம் 2021 இன் ஆரம்பத்தில் முடிவுக்கு வந்ததுடன், தற்போதுள்ள ஆளணியினருடன் அந்த அலகு தொடர்ந்தும் இயங்குகிறது.

---

[30] OMP சட்டத்தின் பிரிவு 10

[31] OMP சட்டத்தின் பிரிவு 13

மேலும், இனிவரும் காலங்களிலான காணாமற்போதல்கள், காணாமற்போதல்களை ஏற்று நினைவேந்தல்களை மேற்கொள்வதற்கான முறைகளும் வழிகளும், அடையாளங்காணத்தக்க மற்றும் அடையாளங்காண இயலாத எச்சங்களைக் கையாளுதல், பொதுத் தேவைகளுக்காக காணாமற்போனோரது பிரச்சினைகள் மீதான தகவல்களைப் பிரசுரித்தல், காணாமற்போனோர் தொடர்பான தேசியச் சட்டங்களையும் உபவிதிகளையும் உருவாக்குதல், காணாமற்போனோரதும் அவர்களது உறவினரதும் சமூக-உளவள உதவிகள் பற்றிய பரிகாரங்களையும் சமூக பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துவதற்கான ஏனைய வழிமுறைகளையும் வழங்குதல் ஆகியன உள்ளிட்ட விடயங்களது பரந்த வியூகம் தொடர்பாக, மற்றைய அரச அதிகார பீடங்களுக்குரிய சிபார்சுகளைச் செய்வதற்கும் OMP இற்கு அதிகாரமுள்ளது.

மேற்படி அதிகாரங்களை வினைத்திறனாகவும் பயனுறுதி வாய்ந்ததாகவும் பிரயோகிப்பதற்காக, தேடுதலும் புலனாய்வும் ஆகியவற்றுக்கான அலகையும், தொடர்பாடலுக்கும் அடைவுக்குமான அலகையும் அமைப்பதற்கான உள்ளகக் கலந்துரையாடல்களை இந்த அறிக்கைக்குரிய காலகட்டத்தில், OMP நடாத்தியது.

தனது புலனாய்வுகளைத் தொடர்வதற்காக, முறைப்பாடுகளைப் பெறுவதற்கு, காணாமற்போனோரது இருப்பிடங்கள் பற்றிய விசாரணைகளையும் புலனாய்வுகளையும் ஆரம்பிப்பதற்கு, OMP இன் முன்னால் தோற்றுவதற்கும் ஏதேனும் தொடர்புடைய ஆவணத்தையோ அல்லது பொருளையோ காண்பிப்பதற்கும் எந்தவொரு ஆளையும் அழைத்தல் உள்ளிட்ட புலனாய்விற்கு அவசியமான எல்லாப் படிமுறைகளையும் எடுப்பதற்கு, தனிப்பட்ட விதத்தில் இரகசியத் தகவல்களை அல்லது வேறு தகவல்களை ஏற்றுக்கொள்வதற்கு, இரகசியம் பேணுதலின் அடிப்படையில் ஏதேனும் தகவல்களை ஏற்றுக்கொள்வதற்கு, பிணமொன்றைத் தோண்டியெடுப்பதற்காக அல்லது சந்தேகமான இடமொன்றைத் தோண்டிப் பார்ப்பதற்காக கட்டளையொன்றைப் பெறும் நோக்கில் நீதிவான் நீதிமன்றுக்கு விண்ணப்பிப்பதற்கும் அவ்வாறான சம்பவமொன்றில் பார்வையாளராகச் செயற்படுவதற்கும், எந்தவொரு அரச நிறுவனத்திலிருந்தும் ஏதேனும் உதவியைக் கோருவதற்கும், தடுப்பு முகாமொன்றை தேடுதல் கட்டளையின்றிப் பார்வையிட்டுத் தேடுவதற்கும், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அல்லது குற்றஞ்சாட்டும் உரிய அதிகார பீடத்திற்கு குற்றத்தை முறையிடுவதற்கும் OMP இற்கு அதிகாரமுள்ளது[32].

எவரேனும் ஆள் OMP இற்கு முன்னால் தோற்றுவதற்குத் தவறுதல், OMP யால் அனுப்பப்பட்ட கட்டளையொன்றின் மூலம் பார்ப்பதற்குக் கோரப்பட்ட ஏதேனும் ஆவணத்தை அல்லது பொருளை முன்வைக்கத் தவறுதல், OMP கேட்ட ஏதேனும் வினாவுக்குக் காரணமின்றிப் பதிலளிக்கத் தவறுதல் அல்லது எழுத்தினாலான அறிவித்தலொன்றுக்கு அல்லது கட்டளையொன்றுக்கு இணங்கத் தவறுதல், OMP யின் அலுவலரொருவரை அவரது அதிகாரத்தைப் பயன்படுத்துவதைத் தடுத்தல் அல்லது எதிர்த்தல், OMP யின் வேலைகளுக்கு வேண்டுமென்றே தடையாக இருத்தல் உள்ளிட்ட OMP யின் அதிகாரத்தை அவமதித்த ஏதேனும் குற்றமொன்றுக்காகத் தடுத்து வைக்கப்பட முடியும்.[33]

தற்போதைய சட்டங்களும் கொள்கைகளும் பின்பற்றப்படுவதற்கும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கும் வசதியளிக்கும் அதேவேளை, காணாமற்போனோரதும் அவர்களது உறவினர்களதும் நன்மை மற்றும் உரிமை கருதியும், சட்டத்தின் ஆட்சி கருதியும் OMP தனது ஆணையைச் செயற்படுத்தியுள்ளது. OMP இற்கு நேரடியாகவோ அல்லது OMP யால்


[32] OMP சட்டத்தின் பிரிவு 12.
[33] OMP சட்டத்தின் பிரிவு 24.

கடந்த மூன்று வருடங்களில் நடத்தப்பட்ட கூட்டங்களிலோ காணாமற்போனோரது உறவினர்களால் OMP யின் செயற்படுத்தல்கள் குறித்து . வெளிப்படுத்தப்பட்ட அபிப்பிராயங்களாலும், நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஆலோசனைச் செயலணியின் (CTF) பரிந்துரைகளாலும்[34] OMP ஆனது வழிகாட்டப்பட்டுள்ளது.

OMP ஆனது கடுமையான ஆளணிப் பற்றாக்குறையால் சிரமப்படுவதுடன் அதனால் அதன் செயற்பாடுகள் தடங்கலுக்குள்ளாகின்றன. 2021 இல் ஆளணி நிலவரங்கள் – முகாமைத்துவ சேவைகள் தினைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 255, நிரந்தரப் பதவிகள் 27, ஒப்பந்த அடிப்படையிலான பதவிகள் 03, தற்காலிக பதவி 01, பயிற்சியாளர்கள் 22 – இவர்கள் நிதி மற்றும் நிர்வாக அலகுகளில் தரவு நிரற்படுத்தலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர், வெற்றிடங்கள் 228. OMP யின் வினைத்திறனையும் பயனுறுதித் தன்மையையும் பாதிக்கின்ற பணியாளர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளதுடன், 2022 இல் இதற்கான முன்னுரிமை வழங்கப்படவும் வேண்டும்.

6.பிராந்தியச் செயற்பாடுகள்:

OMP ஆனது அதன் தலைமை அலுவலகத்தைக் கொழும்பிலும் பிராந்திய மற்றும் பிராந்திய உப அலுவலகங்கள் மூலமும் நாடு முழுவதற்கும் பணியாற்றுகிறது. 12 பிராந்திய அலுவலகங்களைக் கொண்டிருப்பதற்கான ஆணை OMP இற்கு உள்ளதாயினும், அறிக்கையிடப்படும் காலகட்டத்தில் கிளிநொச்சியில் ஓர் அலுவலகத்தைத் தாபித்து, தற்போது ஐந்து பிராந்திய அலுவலகங்களைக் கொண்டுள்ளது.



[34] நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஆலோசனைச் செயலணியின் இடைக்கால அறிக்கை (ஆகஸ்ட் 2016); நல்லிணக்கப் பொறிமுறைக்கான ஆலோசனைச் செயலணியின் இறுதி அறிக்கை. பாகம் I மற்றும் II (17 நொவெம்பர் 2016).

பிராந்திய அலுவலகம் – மட்டக்களப்பு
இல. 124, மத்திய வீதி, மட்டக்களப்பு
தொலைபேசி: 065-222-4532/4534

பிராந்திய அலுவலகம் - யாழ்ப்பாணம்
124, ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2219414/ 9400/9401
தொலைநகல்: 021-221-9414

பிராந்திய அலுவலகம் - மன்னார்
இல. 5, புகையிரத நிலைய வீதி,
மன்னார்.
தொலைபேசி: 023- 2222083 /
தொலைநகல்: 023- 2223929

பிராந்திய அலுவலகம் - மாத்தறை
இல. 54, தர்மாராம வீதி,
மாத்தறை.
தொலைபேசி: 041- 2244684 / 041- 2224046
தொலைநகல்: 041-2244684

பிராந்திய அலுவலகம் - கிளிநொச்சி
A9 வீதி, நீதிமன்றத்துக்கருகில், கிளிநொச்சி. தொலைபேசி: 021-2219400

பிராந்திய அலுவலகங்கள் பிராந்திய ஒருங்கிணைப்பாளர்களின் மேற்பார்வையில் இயங்குவதுடன், அவர்கள் OMP யின் பின்வரும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் மேற்கொள்கின்றனர்:

- OMP யின் பிராந்திய அலுவலகத்தின் பொறுப்பதிகாரியாகத் தொழிற்படுதல்.
- OMP யின் சபை அங்கத்தவர்களது திருப்திக்கேற்ற வகையில் பிராந்திய அலுவலகத்தின் நிதி மற்றும் நிர்வாகத் தொழிற்பாடுகளை வினைத்திறனாகப் பேணுதல்.
- தேடுதல், புலனாய்வு செய்தல், பாதிக்கப்பட்டோரதும் குடும்பங்களினதும் பாதுகாப்புச் செயற்பாடுகளைக் கவனித்தல் ஆகியவற்றுக்கான பிராந்திய மட்டப் பொறுப்புக்கள்.
- பிராந்திய அலுவலகப் பணியாளர்களது வேலைகளை மேற்பார்வை செய்து கண்காணித்தலும், அலுவலகத்தின் பயனுறுதிமிக்க சீரான தொழிற்பாட்டை உறுதிப்படுத்துதலும்.
- மாகாண, மாவட்ட மட்டத்திலுள்ள மற்றைய அரச நிறுவனங்களுடன் காணாமற்போனோர் தொடர்பான விடயங்களில் தவிசாளர் / சபை அங்கத்தவர்கள் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஆகியோரது ஆலோசனையுடன் தொடர்பு படுத்துதல், ஒருங்கிணைந்து பணியாற்றுதல்.
- நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் சட்ட / புலனாய்வு அலகு ஆகியோருடன் ஒருங்கிணைந்து, விசாரணைகளுக்கு / புலனாய்வுகளுக்கான மற்றும் காணாமற்போனோரது உறவினருக்கு இடைக்கால அறிக்கைகளை வழங்குவதற்கான அவசிய ஒழுங்கமைப்புகளை மேற்கொள்ளுதல்.
- காணாமற்போனோரது குடும்பங்களால் தெரிவிக்கப்படும் பாதுகாப்பு தொடர்பான விடயங்களில் கண்காணிப்பை மேற்கொண்டு, பாதுகாப்பு அலகுடன் ஒருங்கிணைத்தல், அதன்படி மேற்கொண்டு செயற்படுதல்.
- OMP யின் நிறைவேற்றுப் பணிப்பாளரது ஆலோசனையுடன் பிராந்திய மட்டத்தில், பாதிக்கப்பட்டோர் மற்றும் குடும்பத்துக்கு ஆதரவளிக்கும் செயற்பாடுகளைக் கவனித்தல்.
- OMP யின் ஆணை தொடர்பாக OMP யால் எடுக்கப்படும் நடவடிக்கைகளை பிராந்திய மட்டத்தில் கண்காணித்தல்.
- பிராந்திய அலுவலகம் எதிர்கொள்ளும் சவால்கள், அதன் செயற்பாடுகள், தேவைகள் ஆகியவற்றின் முன்னேற்றம் தொடர்பாக தலைமை அலுவலகத்திற்கு அறிக்கையிடல்.
- பிராந்திய அலுவலகத்தின் காலாந்திர முன்னேற்ற அறிக்கைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கு அனுப்புதல்.
- OMP யின் உரிய பிரிவுத் தலைவர்களுடன், பிராந்திய அலுவலகத்தின் நாளாந்தக் கடமைகள் தொடர்பாக ஒருங்கிணைந்து செயற்படுதல்.
- பொருத்தமான தரவுத்தளத்தைப் பேணுவதில் தரவுத்தளத்திற்குரிய தலைமை அலுவலருடன் தொடர்புகளைப் பேணுதல்.

2021 ஆம் ஆண்டானது உலகம் முழுவதற்குமே சவால் மிக்க ஓர் ஆண்டாக இருந்ததுடன், இலங்கையும் இதற்கு விதிவிலக்காக இருக்கவில்லை. கொவிட் 19 பெருந்தொற்றால் உருவான சுகாதாரப் பிரச்சினைகள் காரணமாக, இலங்கை பல்வேறு சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தது. நாட்டின் முடக்கப்பட்ட கால நீடிப்புகள், பிரயாணக் கட்டுப்பாடுகள் போன்றன அலுவலகச் செயற்பாடுகளையும் பாரிய அளவில் பாதித்தன. எனவே,

இவ்வருடத்தின் செயற்பாடுகள் பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்படும்போது முகங்கொடுத்த சிரமங்களையும் கணக்கிற்கொள்ளுதல் வேண்டும்.

7.நிகழ்ச்சித்திட்ட மூலோபாயம்:

2021 இன் நிகழ்ச்சித்திட்ட மூலோபாயத்தைத் தயாரிப்பதில், OMP அரசாங்க மற்றும் அரச சார்பற்ற பங்குதாரர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தியது. 2021 இன் இறுதிப்பகுதியில் புதிய தவிசாளர் திரு. கட்டுலந்த அவர்களது நிமனத்தின் பின்னர், OMP தனது மூலோபாயத் திட்டங்களை பின்வரும் விடயங்களில் மீள்பரிசீலனைக்குட்படுத்தியது:
தடுப்பு நடவடிக்கைகள் – தடுப்பு மூலோபாயங்கள், விழிப்புணர்வூட்டுதல், சிறுவர் இளையோர் மற்றும் வயதானோர் அடுத்தடுத்துக் காணாமற்போன சம்பவங்கள் தொடர்பாக உடனடித் தலையீடுகளை மேற்கொள்ளல் ஆகியவற்றூடாக காணாமற்போவோரது எண்ணிக்கையைக் குறைத்தல்.

பாதுகாப்பு நடவடிக்கைகள் – காணாமற்போனோரைக் கண்டுபிடிப்பதற்காக ஏற்கனவே தயாராகவுள்ள ஆபத்தை அடிப்படையாகக்கொண்ட நடவடிக்கைகளை உள்ளூர் முகவர்களூடாக எடுத்து உள்ளூர் மற்றும் தேசிய மட்டத்தில் சம்பவங்களை முடிவுறுத்துவதை உறுதிப்படுத்துவதன் மூலம் காணாமற் போவோருக்கான ஆபத்தைக் குறைத்தல்.
நிவாரணம் வழங்கும் ஏற்பாடுகள் – காணாமற்போனோர் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு ஆதரவையும் வழிகாட்டுதல்களையும் வழங்குதல் - காணாமற்போனோர் மற்றும் அவர்களது குடும்பங்கள் எவ்வாறு, எங்கு தமக்குரிய உதவிகளையும் ஆதரவையும் பெறலாம் என்பதை உறுதிப்படுத்தி உடனடியாக நடவடிக்கை எடுத்தல்.

2021 இற்கான வருடாந்தத் திட்டம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருந்ததுடன், அரசாங்கம், புதிதாக அமைக்கப்பட்ட ஒற்றுமைக்கான கொத்தணி, சிவில் சமூகம், நன்கொடையாளர்கள், இராஜதந்திரச் சமூகம் ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எல்லாப் பங்குதாரர்களூடனும் சேர்ந்தியங்குதலையும் உள்ளடக்கியிருந்தது.

7.1 பாதிக்கப்பட்டோருக்கான மற்றும் குடும்பங்களுக்கான உதவிகள்

பாதிக்கப்பட்டோருக்கான மற்றும் குடும்பங்களுக்கான உதவிகளை வழங்கும் அலகின் ஆரம்பச் செயற்பாடுகளாக, முறைப்பாடுகளைப் பெற்று அவை கிடைத்தமை பற்றிய அறியத்தருதல், குடும்பங்களுடன் தொடர்பு கொண்டு மற்றைய அலகுகள் / நிறுவனங்கள் வழங்கும் தகவல்களை வழங்குதல், அவர்களால் அடைய முடியாத சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல், விசேட உளவளச் சேவைகளைப் பரிந்துரைத்தல், OMP யின் இடைக்கால நிவாரணப் பரிந்துரைகளைத் தொடருதல், நிலைமைகளைத் திருத்தியமைத்தல், பணியாளர்களைப் பயிற்றுவித்தல், நிகழ்வுகளை ஒழுங்கு செய்தல்.

7.2 பாதுகாப்பு

OMP யின் சட்டத்தின் பிரகாரம், "பாதுகாப்பு அலகானது, காணாமற்போனோரது உறவினர்கள், பாதிக்கப்பட்டோர், சாட்சியாளர்கள் ஆகியோரது தேவைகளையும் கவனங்களையும் கவனித்து, அவர்களது உரிமைகளைப் பாதுகாத்தல் வேண்டும்"[35]. இந்த அலகானது OMP யின் சபை, பணியாளர்கள், வளாகங்கள், அதனுடன் ஒத்துழைக்கும் வெளியக நபர்கள் போன்றோரைப் பாதுகாப்பதற்கான பொறுப்பைக் கொண்டதாகும். பாதுகாப்பு அலகின் முக்கிய கடமைகளாக சம்பவங்களை ஆவணப்படுத்துதல், நெறிமுறைகளை உருவாக்குதல், நிலையான நடவடிக்கைச் செயன்முறைகள், பின்தொடரும் பொறிமுறையொன்றைப் பயன்படுத்தி காணாமற்போனோர் பற்றிய புதிய முறைப்பாடுகளைக் கண்காணித்தல், தொடர்ச்சியான பாதுகாப்பு நடவடிக்கைகள், பயிற்சியளித்தல், செயன்முறைகளை மறுபரிசீலனைக்குட்படுத்துதல் போன்றன இருக்கும்[36].

---

[35] 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க OMP சட்டத்தின் பிரிவு 18(1).
[36] விரிவான மூலோபாயத்திற்கு பின்னிணைப்பு I ஐப் பார்க்கவும்.

7.3 சட்ட மற்றும் கொள்கை மறுசீரமைப்புகள்

காணாமற்போனோர், அவர்களது உறவினர் ஆகியோரது உரிமைகளைப் பாதுகாத்தல், அவர்களுக்குரிய பொருளாதார சமூக-உளவள, சட்ட, நிர்வாக ரீதியான உதவிகளைப் பெறுவதற்கு ஆவன செய்தல் ஆகிய ஆணைகளை OMP கொண்டுள்ளது[37]. மேலும், காணாமற்போதல்கள் மீண்டும் நிகழாதிருத்தல், மனித எச்சங்களைக் கையாளுதல், காணாமற்போனோர், அவர்களது உறவினர் ஆகியோரது சமூக பொருளாதார நிலைமைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு அரச அதிகார பீடங்களுக்குரிய பரிந்துரைகளைச் செய்வதற்கும் OMP அதிகாரத்தைக் கொண்டுள்ளது[38]. மேற்படி ஆணைகளைச் செயற்படுத்தும்போது, காணாமற்போனோருக்கான சான்றிதழ்கள் தொடர்பாக OMP சட்ட மற்றும் கொள்கை ரீதியான பரிந்துரைகளை வழங்கியுள்ளது; அவ்வாறான சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்வதற்கு வசதியளிப்பதற்கான இடைக்கால அறிக்கைகளை காணாமற்போனோரது குடும்பங்களுக்கு வழங்கியுள்ளது; 2019 பாதீட்டில் கூறப்பட்டவாறு அல்லது வேறு வடிவங்களில் நிவாரண நடவடிக்கைகள் நன்கு நடைமுறைப்படுத்தப்படுவதற்கான பரிந்துரைகளையும் பிரசாரங்களையும் மேற்கொண்டுள்ளது; மனித எச்சங்கள் தொடர்பாக நீதிவானுக்குரிய அதிகாரங்களைக் கொண்டுள்ளது; காணாமற்போனாரது குடும்பங்களுக்கு கொவிட் நிவாரணங்களையும், தனிப்பட்ட ஒவ்வொரு சம்பவத்திலும் தேவையான சட்ட மற்றும் நிர்வாக உதவிகளை வழங்கியுள்ளது. சட்ட மற்றும் கொள்கை அலகானது இடைக்கால ஒழுங்குகள், நீதிமன்றங்களில் தோற்றுதல், சட்டவாளர்களுக்கான மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல், சட்ட ஏற்பாடுகளில் தகுதிகளை மேம்படுத்துதல் ஆகிய விடயங்களையே பிரதானமாகக் கையாளுகின்றது[39].

7.4 காணப்படாமைக்கான சான்றிதழ் (CoA)

2016 இன் 16 ஆம் இலக்க, மரணங்களைப் பதிவுசெய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமானது, காணாமற்போனாரது குடும்பங்களுக்கு காணாப்படாமைக்கான சான்றிதழ்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்கின்றது. இது ஒரு சட்டபூர்வமான ஆவணமாக இருப்பதுடன், காணாமற்போனோருக்கான சட்ட அந்தஸ்தையும் வழங்குகிறது. மேலும் காணாமற்போனோரது குடும்பத்தினர் தமக்குரிய நிர்வாக மற்றும் நிதி தொடர்பானதும் மற்றைய சேவைகளையும் காணாமற்போனோரது மரணச் சான்றிதழ் இல்லாத நிலையில், பெறுவதற்கு வழியேற்படுத்துகிறது. வடக்கிலும் கிழக்கிலும் அரசியல் ரீதியான கலவரங்கள், சிவில் கலவரங்கள் ஆகியவற்றின்போது பிரசையொருவர், அல்லது படையிலுள்ள அல்லது பொலிசிலுள்ள அங்கத்தவரொருவர் தமது செயற்பாட்டின்போது காணாமற்போயிருந்தால் காணாப்படாமைக்கான சான்றிதழ் வழங்கப்பட முடியும்.

மரணங்களைப் பதிவுசெய்வதற்கான சட்டமானது[40] காணாப்படாமைக்கான சான்றிதழைப் பெறுவதற்குரிய பொதுவான செயன்முறையைப் பின்வருமாறு ஏற்பாடு செய்கின்றது: (i) மாவட்டப் பதிவாளர்களால் நடாத்தப்படும் விசாரணைச் செயன்முறையொன்றினூடாக; (ii) OMP யால் வழங்கப்படும் இடைக்கால அறிக்கையை அல்லது முன்னைய விசாரணை ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு காணாப்படாமைக்கான சான்றிதழ் வழங்கப்படுவதற்கான குறித்ததொரு செயன்முறையொன்றினூடாக[41]. துரதிஷ்டவசமாக, அரச அதிகாரிகளிடையே விழிப்புணர்வின்மையாலும், மேற்படி இரு செயன்முறைகள் பற்றிய குழப்பம் காரணமாகவும் இந்தச் சான்றிதழ்களைப் பெறும்போது குடும்பத்தினர் சவால்களை எதிர்நோக்கினர்.

நிறுவன ரீதியான மட்டத்தில், OMP பதிவாளர் நாயகம் திணைக்களத்துடன் இதற்கு வசதியளித்தலைத் தொடர்ந்ததுடன், குடும்பங்களுக்கு இச்சான்றிதழை வழங்குவதைத் துரிதப்

---

37 OMP சட்டத்தின் பிரிவுகள் 2(b), 10(c), 13(c),(f).

38 OMP சட்டத்தின் பிரிவுகள் 13(k)(i),(iii),(vii).

39 2021 ஆம் ஆண்டுக்கான நடவடிக்கைத் திட்டத்தின் பின்னிணைப்பு II ஐப் பார்க்கவும்.

40 2016 இன் 16 ஆம் இலக்க, மரணங்களைப் பதிவுசெய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டம் – பிரிவுகள் 8A – 8E

41 2016 இன் 16 ஆம் இலக்க, மரணங்களைப் பதிவுசெய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டம் – பிரிவு 8G

படுத்தியது. 2019 மே மாதத்தில் OMP இற்கும் பதிவாளர் நாயகம் திணைக்களத்திற்கும் இடையிலான ஒத்துழைப்புக்கான கடிதமொன்று கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து, அத் திணைக்களத்தின் அதிகாரிகளுடனும் மாவட்டப் பதிவாளர்களுடனும் OMP தொடர்ச்சியான தொடர்புகளைப் பேணி, சட்டத்தின் ஏற்பாடுகள் குறித்து தெளிவுபடுத்தல்களை மேற்கொண்டு திணைக்களத்திற்காக சுற்றறிக்கைகளைத் தயாரித்தது, இச்சுற்றறிக்கைகளில் மாவட்ட மற்றும் உதவிப் பதிவாளர்கள் காணாமற்போனோருக்கான சான்றிதழை வழங்குவதில் பின்பற்ற வேண்டிய பொதுவான மற்றும் விசேட செயன்முறைகள் தரப்பட்டன[42].

காணாப்படாமைக்கான சான்றிதழை அல்லது மரணச் சான்றிதழைப் பெறுவது குறித்த விசாரிப்புகள் மற்றும் காணாமற்போனோரது குடும்பங்களிலிருந்து தலையீடு செய்வதற்காகப் பெறப்பட்ட வேண்டுகோள்கள் ஆகியவற்றில், ஒவ்வொருவர் குறித்த சம்பவத்திலும், மாவட்ட மற்றும் உதவிப் பதிவாளர்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஆகியோருடன் OMP தனது தொடர்புகளைப் பேணியது.

7.5 இடைக்கால அறிக்கைகள்

முறைப்பாட்டுடன் தொடர்புடையவர் காணாமற்போய்விட்டார் என்பதை முடிவு செய்வதற்கு, போதுமான விடயங்கள் OMP இற்குக் கிடைக்கும்போது, அது குறித்த விசாரணைகள் முடிவடையாதிருப்பினும், காணாமற்போனோரது உறவினர்களுக்கு இடைக்கால அறிக்கைகளை வழங்குவது OMP யின் பணியாக இருந்தது[43]. இடைக்கால அறிக்கையொன்றிற்கான தனியானதொரு நோக்கமாக, அவ்வாறான காணாமற்போனவரது உறவினருக்கு பதிவாளர் நாயகத்தால் காணாப்படாமைக்கான சான்றிதழை வழங்குவதற்கு வசதியளித்தலாகும்[44]. இடைக்கால அறிக்கையை வழங்குவதற்கான செயன்முறையானது, OMP சட்டத்தாலும்[45], மரணங்களைப் பதிவு செய்வதற்கான சட்டத்தாலும்[46] குறித்துக்கூறப்பட்டவாறு, 2019 இல் OMP யால் தயாரிக்கப்பட்டதுடன், அதற்குரிய கொள்கைகள், செயன்முறைகள், விதிகள், வழிகாட்டுதல்கள் யாவும் உள்ளடக்கப்பட்டன. 2020 ஜனவரியில் முன்னோடி விசாரணைச் செயன்முறையைத் தொடர்ந்து, முதலாவது இடைக்கால அறிக்கை காணாமற்போன ஒருவரது உறவினருக்கு 2020 இல் வழங்கப்பட்டது. 2021 இல் பல்வேறு இடங்களில் நடாத்தப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து, OMP யால் 67 இடைக்கால அறிக்கைகள் வழங்கப்பட்டன.

அறிக்கையிடப்படும் காலப்பகுதியில் பிராந்தியங்களில் OMP பின்வருமாறு விசாரணைகளை நடாத்தியிருந்தது: மாத்தறை – 01, மன்னார் – 42, யாழ்ப்பாணம் – 24, மட்டக்களப்பு – 00, கிளிநொச்சி (2021 ஆகஸ்ட்டில் அமைக்கப்பட்டது) – 00.

7.6 தரவு முகாமைத்துவம்

மற்றைய அதிகார பீடங்களுடன் வினைத்திறனான மற்றும் பயனுறுதி மிக்க ஒருங்கிணைப்பைப் பேணுவதற்காக, OMP ஆனது, சட்டத்தினால் வழங்கப்பட்ட ஆணையின் பிரகாரம், 2021 இல் விரிவானதொரு தரவு முகாமைத்துவ முறைமையை உருவாக்கியதுடன், பதிவாளர் நாயகம் திணைக்களம், நட்டஈட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம் போன்ற மற்றை நிறுவனங்களது ஆலோசனையுடன் அதனை மேம்படுத்திப் பேணுகிறது.

7.7 ஒற்றுமைக்கான கொத்தணி

ஒற்றுமைக்கான கொத்தணி என்பது நீதி அமைச்சாலும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சாலும், இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான ஒரு தொடுகோடாக உருவாக்கப்பட்ட யோசனையாகும். ஒற்றுமைக்கான கொத்தணியில் நட்டஈட்டுக்கான அலுவலகம், தேசிய

---

[42] 2016 இன் 16 ஆம் இலக்க, மரணங்களைப் பதிவுசெய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டம் – பிரிவு 8A-8E மற்றும் 8G

[43] 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க OMP சட்டத்தின் பிரிவு 13 (1)(a)(i)

[44] 2016 இன் 16 ஆம் இலக்க, மரணங்களைப் பதிவுசெய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டம் அல்லது பதிவாளர் நாயகத்தால் CnAs வழங்கலை அனுமதிக்கும் அவ்வாறான சட்டம்

[45] 2016 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க OMP சட்டத்தின் பிரிவு 13 (1)(a)(i)

[46] 2016 இன் 16 ஆம் இலக்க, மரணங்களைப் பதிவுசெய்தல் (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டம்.

ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம், இலங்கையின் நிலைத்த அபிவிருத்திக்கான பணியகம், OMP ஆகியன உள்ளடங்கியுள்ளன. இக் கொத்தணி முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக மாதந்தோறும் தனது கூட்டத்தை நடாத்துவதுடன், காலாண்டுக்கொரு தடவை அமைச்சுடனும் கூட்டத்தை நடாத்துகிறது. மேலும், அது வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் வேண்டுகோளின்பேரில் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுடனும், சிவில் சமூகங்களுடனும், அபிவிருத்திப் பங்காளர்களுடனும் கூட்டத்தை நடாத்தியுள்ளது. OMP டிசெம்பர் 2021 வரை ஐந்து ஒற்றுமைக்கான கொத்தணிக் கூட்டங்களில் கலந்துகொண்டுள்ளதுடன், ஒருங்கிணைந்த செயற்பாடுகள், சவால்கள், புதிய முயற்சிகள் ஆகியன குறித்து தனது முன்னேற்றத்தைப் பங்களித்துள்ளது.

8. 2021 இற்கான நிகழ்ச்சித்திட்டச் சிறப்பம்சங்கள்:

2020 இலும் 2021 இலும், சபையால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த வேலைத்திட்டத்திலிருந்து தனது வழிகாட்டுதல்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. OMP தனது கடப்பாடுகளைப் பூர்த்தி செய்வதில் கொவிட் 19 இற்கான பிரயாணக் கட்டுப்பாடுகள், முடக்கங்கள் ஆகிய பிரதான சவால்களுடன், ஒன்றுக்கு மேற்பட்ட சவால்களைச் சந்தித்துள்ளது என்பதை வலியுறுத்துகிறது. சபையும் பணியாட்களும் தமது செயற்பாடுகளை, தரவுத்தளத்தை முகாமைத்துவம் செய்தலை வழமைக்குக் கொண்டுவருவதில் காலத்தைச் செலவழிக்க வேண்டியிருந்ததுடன், 2021 இல் முன்னுரிமையளிக்கப்பட்ட விடயமாகவும் இது காணப்பட்டது. இதனால் பிரயாணங்களைக் குறைக்கவும், அலுவலகத்தில் செலவிட்ட காலத்தைக் குறைக்கவும் நேரிட்டது.

8.1 பாதிக்கப்பட்டடோருக்கும் குடும்பங்களுக்குமான உதவிகள்

பாதிக்கப்பட்டோருக்கும் குடும்பங்களுக்குமான உதவிகளை வழங்கும் அலகு முறைப்பாடுகளைப் பெற்று கிடைத்தமை பற்றி அறியத்தருதல், பாதிக்கப்பட்ட குடும்பங்களுடனான தொடர்பாடலும் பரிந்துரைகளும், அவர்களால் அடைய இயலாத சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல், விழிப்புணர்வூட்டுதல், உளவள ரீதியான உதவிகள், இடைக்கால நிவாரணம், நட்டஈடு, நினைவேந்தல் சேவைகள், பணியாளர் முன்னேற்றம் ஆகியவற்றைக் கையாளுகிறது. பாதீட்டு ஒதுக்கங்களில் கணிசமான பங்கு ஆணைக்குழுவின் இவ்வாறான செயற்பாடுகளுக்கே வழங்கப்படுகிறது.

அ. முறைப்பாடுகளைக் கையாளுதல்

அறிக்கையிடப்படும் காலப்பகுதியினுள் கடைப்பிடிக்கப்பட்ட பிரயாணக் கட்டுப்பாடுகள் காரணமாக உள்ளக நடவடிக்கைகளுக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஆயினும், தீர்வு காணப்படாத சில முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டு, புதிய முறைப்பாடுகளும் கவனத்திலெடுக்கப்பட்டன. 2021 ஆம் ஆண்டில் 56 புதிய முறைப்பாடுகள் பெறப்பட்டு, பழைய முறைப்பாடுகள் உள்ளடங்கலாக 10,592 முறைப்பாடுகள் கிடைத்தமை பற்றிய அறியத் தரப்பட்டது. பிராந்தியங்களிலிருந்து (அம்பாறை, திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, கிளிநொச்சி) 1354 முறைப்பாடுகள் பெறப்பட்டதுடன், அவை கிடைத்தமை பற்றி அறிக்கையிடும் காலப்பகுதியில் அறியத்தரப்பட்டது.

கட்டம் I (6025 கோவைகள்) இலுள்ள எல்லா ஆவணங்களும் மீள்பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு, முன்னுரிமையளிக்கப்படுவதற்கான மூன்று ஆரம்ப கட்டங்களாக வகைப்படுத்தப்பட்டன. முன்னுரியளிக்கப்படும் முதலாவது கட்ட சம்பவங்கள் 2000 மற்றும் 2021 ஆண்டுகளுக்கு இடைப்பட்டனவாகவும், இரண்டாவது கட்டச் சம்பவங்கள் 1999 இலிருந்து 2021 வரையானதாகவும், மூன்றாவது கட்டம் 1990 இற்கு முந்தையனவாகவும் வகைப்படுத்தப் பட்டன. காணாமற்போனமை நடைபெற்ற திகதி, காணாமற்போனவரது பால், இடம், சம்பவத்தின் தன்மை, நிர்வாக மாவட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் அவை மதிப்பீடு செய்யப்பட்டன.

OMP ஆனது, கட்டம் I இலுள்ள 6025 விண்ணப்பங்களை / கோவைகளைக் கையாளுதலை விரைவுபடுத்தத் தீர்மானித்தது:

i. மிகச் சமீபத்தில் நிகழ்ந்த காணாமற்போன ஆட்கள் பற்றிய சம்பவங்கள்;

ii. ஏற்கனவே குறிப்பிடத்தக்க சாட்சியங்களைக் கொண்டுள்ள சம்பவங்கள்; அல்லது,
iii. OMP யின் அபிப்பிராயப்படி, பொது முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள்.

கிடைக்கப்பெற்ற 6025 முறைப்பாடுகள் இந்தக் காலகட்டத்தில் வகைப்படுத்தப்பட்டு, விண்ணப்பதாரியின் விபரங்களுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள், சம்பவத்துடன் தொடர்புபட்ட விடயங்கள், சம்பவத்தின் பின்னர் விண்ணப்பதாரி அடைந்த முன்னேற்றங்கள், விண்ணப்பதாரிக்கும் காணாமற்போனவருக்கும் இடையிலான உறவுமுறை ஆகியவற்றைக் கொண்ட ஒரு சரிபார்க்கும் பட்டியலூடாகச் சரிபார்க்கப்பட்டன. 6025 முறைப்பாடுகளில், 1600 முறைப்பாடுகள் பூரணமற்றவையாக இருந்ததால், தவறவிடப்பட்ட தகவல்களைப் பெறுவதற்காகவும், மேலும் தேவைப்பட்ட ஆவணங்களுக்காகவும் சம்பந்தப்பட்ட முறைப்பாட்டாளர்களுடன் OMP தொடர்புகொண்டது.

அறிக்கையிடப்படும் காலகட்டத்தில், கிட்டத்தட்ட 350 முறைப்பாடுகள் மொழிபெயர்க்கப்பட்டு, இடைக்கால அறிக்கைக்கான விசாரணைச் செயன்முறைக்கான மதிப்பீடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றில் இடைக்கால அறிக்கைகள் வழங்கப்பட்ட 68 முறைப்பாடுகளும் உள்ளடங்கும்.

ஆ. குடும்பங்களுடனான தொடர்பாடல்

கொவிட் காரணமான பிரயாணக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும், குடும்பங்கள் தமக்குரிய தகவல்களை வழங்குவதற்காக, சட்டரீதியான சிக்கல்களுக்காக OMP அலுவலகத்தைத் தொடர்பு கொள்வதைத் தொடர்கின்றனர். இவ்வாறான தொடர்பாடல்கள் 2020 உடன் ஒப்பிடும்போது குறைவாகவே உள்ளன. 2020 ஆம் ஆண்டில், OMP யின் பிராந்திய அலுவலகங்கள் 1991 குடும்பங்களுடனும், தலைமை அலுவலகம் 35 குடும்பங்களுடனும் தொடர்பாடல்களை மேற்கொண்டிருந்தன. 2021 இல், இது ஆக 16 குடும்பங்களாகவே காணப்பட்டன.

இ. சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல்

குறித்த காலப்பகுதிக்குள் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் காரணமாக, சேவைகளைப் பெற்றுக் கொடுத்தலானது, ஒரு சவாலாகக் காணப்பட்டதுடன், அதற்குப் பதிலாக, தயார்படுத்தும் வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. இக்காலப்பகுதிக்குள் சம்பவங்களைக் கையாளும் செயன்முறையுட்னான படிப்படியான வழிகாட்டல்கள், சரிபார்த்தலுக்கான பட்டியல், அரச பணியாளர்களுக்கான பயிற்சிக்கான ஆவணங்கள் போன்றன தயாரிக்கப்பட்டன. மேலும், 25 மாவட்டச் செயலாளர்களும், அரச சேவைகள் மற்றும் நிர்வாக அமைச்சின் 30 அதிகாரிகளும் OMP யின் செயற்பாடுகள் பற்றிய திசைப்படுத்தும் மற்றும் அவர்களால் எவ்வாறு OMP இற்கு உதவ முடியும் என்பது பற்றியும் பயிற்சிகளில் ஈடுபடுத்தப்பட்படனர். இதற்கு மேலதிகமாக, 2000 தரவுப் படிவங்களும் இடைக்கால அறிக்கையைப் பெறுதற்கான படிவங்களும் அச்சிடப்பட்டு, பிராந்திய அலுவலகங்களில் விநியோகத்துக்கென வைக்கப்பட்டன.

ஈ. பரிந்துரைக்கும் முறைமை

சமூக-உளவள மற்றும் சமூகப் பொருளாதாரத் தேவைகளை மதிப்பீடு செய்யும் ஆராய்வொன்று நடாத்தப்பட்டது. அதன் பயனாக, தேவைகளை மதிப்பீடு செய்யும் மூலோபாய ஆவணமொன்று தயாரிக்கப்பட்டது.

உ. நட்டஈடு

புலனாய்வு அலுவலகம், நட்டஈட்டு அலுவலகம் ஆகியவற்றுடனான ஒருங்கிணைப்புடன் 100 சம்பவங்கள் நட்டஈட்டுக்காகப் பரிந்துரைக்கப்பட்டன.

8.2 பாதிக்கப்பட்டோரதும் சாட்சியாளர்களதும் பாதுகாப்பு

பாதிக்கப்பட்டோரதும் சாட்சியாளர்களதும் பாதுகாப்பு முறைமையொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் ஆணையை OMP கொண்டுள்ளது. பாதிக்கப்பட்டோரிடமிருந்தும் சாட்சியாளர்களிடமிருந்தும் முறைப்பாடுகளைப் பெற்றுப் பதிவுசெய்வதுடன், தனது இடைக்கால அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள சிபாரிசுகளை நடைமுறைப்படுத்துவதற்குமான செயன்முறையொன்றை அது உருவாக்கியுள்ளது. OMP ஆனது, பாதிக்கப்பட்டோர், சாட்சியாளர் அல்லது நீதிக்காக ஒத்துழைக்கும் மற்றையோர் மீதான அச்சுறுத்தல்களையும் மிரட்டல்களையும் தடுப்பதற்கும் விசாரிப்பதற்கும் சட்டமா அதிபதியின், பொலிஸ் மா அதிபரின், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோரது ஒத்துழைப்பைக் கோருதல் வேண்டும். மேலும், பாதிக்கப்பட்டோர், சாட்சியாளர், காணாமற்போனோரது குடும்பங்கள் ஆகியோரது உரிமைகளைப் பாதுகாத்து, OMP யுடன் சேர்ந்து தொழிற்படுவோர், அதன் பணியாளர்கள், அதன் வளாகம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கான ஆணையை பாதுகாப்பிற்கான அலகு கொண்டுள்ளது.

OMP யின் பாதிக்கப்பட்டோர், சாட்சியாளர் ஆகியோரது பாதுகாப்புச் செற்பாடுகளை உறுதிப்படுத்துவதற்காக, 2021 இல் இந்த அலகானது 2 முறைப்பாடுகளது பின்தொடரும் அட்டவணைகளைப் புதுப்பித்துள்ளதுடன், 11 ஆலோசனைகளை நடைமுறைப்படுத்தி, 09 சம்பவங்கள் பற்றிய தகவல்களைப் பகிர்ந்துள்ளது. மேலும், புலனாய்வுகளை நடாத்துவது பற்றிய பயிற்சிகளை மொத்தமாக 121 பேருக்கு 4 நிகழ்வுகளினூடாக வழங்கி அவர்களது திறன்களை உயர்த்தியுள்ளது. அவ்வாறு பயிற்றப்பட்ட அலுவலர்கள் புலனாய்வுகளை நடாத்தி, 11 சம்பவங்களை உரிய முகவர்களுக்கு அனுப்பியுள்ளனர். இதற்கு மேலதிகமாக, 2021 இல் எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் 3 நிகழ்வுகளினூடாக ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு, 171 பேருக்குரிய பலன்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. மேலும், 184 அலுவலர்களை உள்ளடக்கி மூன்று ஆலோசனைக் கூட்டங்களும் நடாத்தப்பட்டுள்ளன. OMP, 27 சம்பவங்கள் குறித்து ஆராய்ந்து, பின்தொடரும் அட்டவணையைத் தயாரித்து, விபரங்கள் அடங்கிய அறிக்கைகளை உருவாக்கியுள்ளது.

8.3 சட்ட மற்றும் கொள்கை மறுசீரமைப்புகள்

OMP காணாமற்போனோர் தொடர்பான சிபாரிசுகளை உருவாக்குவதற்கும், அவர்களதும் அவர்களது உறவினரதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நேரடியான ஆணையைக் கொண்டுள்ளது. காணாமற்போனோரது குடும்பங்கள் பொருளாதார, சமூக-உளவள, சட்ட மற்றும் நிர்வாக உதவிகளைப் பெறுவதில் வசதியளிப்பதற்கான பொறுப்பையும் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் ஆட்கள் காணாமற்போவதைத் தடுத்தல், மனித எச்சங்களைக் கையாளுதல், காணாமற்போனோரது உறவினர்களின் பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளை மேம்படுத்துதல் ஆகியன உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை மற்றைய அரச அதிகார பீடங்களுக்கு முன்வைப்பதற்கான அதிகாரத்தையும் OMP கொண்டுள்ளது.

காணாமற்போனோரதும், காணாமற்போன இராணுவத்தினரதும் குடும்பங்களிடமிருந்து அரச உதவிகளை பெறுதல், நிதிச் சேவைகள், நட்டஈடு, மரணச் சான்றிதழ்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுதல், காணாப்படாமைக்கான சான்றிதழைப் பெறுதல், நடைபெற்றுவரும் நீதிமன்ற வழக்குகள், சொத்துகள் பற்றிய பிணக்குகள், உடைமையும் பின்னுரித்தும் உள்ளிட்ட பல்வேறு விடயங்களில் உதவிகோரும் விண்ணப்பங்களை OMP தொடர்ந்து பெற்றுவருகிறது. இவ்வாறான விடயங்களை நட்டஈட்டு அலுவலகம், பதிவாளர் அதிபதி திணைக்களம், உள்ளூராட்சி நிறுவனங்கள், படைகள் போன்ற பொருத்தமான நிறுவனங்களுக்கு முன்னனித்தல் மூலம் OMP இவற்றுக்குப் பதிலளித்தும் வருகிறது. அவ்வாறான குடும்பங்களுக்குரிய சட்ட ஆலோசனைகளை வழங்குதல், வழிகாட்டல்களை வழங்குதல், முன்னனித்தல் போன்ற நடவடிக்கைகளினூடாக OMP உதவுகிறது.

குறித்த சம்பவங்களில் காணாப்படாமைக்கான சான்றிதழை மற்றும் மரணச் சான்றிதழைப் பெறுதல் ஆகியவற்றுக்காக மாவட்டப் பதிவாளர்கள், பிரதேசச் செயலாளர்கள், கிராம அலுவலர்கள் போன்றோரது ஒத்துழைப்புகளைப் பெற்று, காணாமற்போனோரது குடும்பங்களின் கோரிக்கைகளுக்கிணங்க OMP உதவிகளை வழங்குகிறது.

OMP இற்குரிய ஆணையின் பிரகாரம், 385 இடைக்கால அறிக்கைகளுக்கான சிபார்சுகளை வழங்கியுள்ளதுடன், தரவுத்தளத்தையும் புதுப்பித்துள்ளது. 2021 இல் 3100 கோவைகளுக்குரிய முன்னேற்றங்கள் தரவுத்தளத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக, உரிய நீதிமன்றங்களுக்கு OMP சமர்ப்பித்துள்ள விண்ணப்பங்களின் மீது, மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நீதி நடவடிக்கைகளில் பார்வையாளராக இருப்பதற்கும், ஏழு இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் குறித்துப் புலனாய்வு செய்வதற்கும் அது அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கைக்குரிய காலப்பகுதியில், புலனாய்வுகளின் முன்னேற்றங்களை ஆராய்வதற்கும், நீதிமன்ற விசாரணைகளை அவதானிப்பதற்கும், உரிய குடும்பங்களுக்கு உதவுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை OMP தொடர்கிறது. மேலும், சட்ட மற்றும் கொள்கை மறுசீரமைப்பு அலகு 13 நீதிமன்ற வழக்குகளில் தோற்றி, அறிக்கைகளையும் சட்டத்தரணிகளது அறிக்கைகளையும் சமர்ப்பித்துள்ளது.

2021 ஆம் ஆண்டில், சட்ட மற்றும் கொள்கை மறுசீரமைப்பு அலகு மூன்று பயிற்சிநெறிகளை உருவாக்கியதுடன், அவை தோண்டியெடுத்தல், தடயவியல் மற்றும் டி.என்.ஏ தொழில்நுட்பம் ஆகியவை குறித்து சட்டத்தரணிகளையும் சட்ட அலுவலர்கள் / பணியாளர்கள் ஆகியோரையும் OMP யின் சபை அனுமதியுடன் பயிற்றுவிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. மேலும், 11 பணியாளர்களது திறன் விருத்திக்காக, இரகசியம் பேணுதலும் மற்றைய சட்ட ஏற்பாடுகளும் பற்றி இரு பயிற்சி அமர்வுகளும், 15 பணியாளர்களுக்காக தொழில்நுட்ப ரீதியான மற்றும் ஏனைய நிபுணத்துவங்களில் ஓர் அமர்வைக் கொண்ட பயிற்சியையும் இந்த அலகு ஏற்பாடு செய்தது.

8.4 தரவு முகாமைத்துவம்

முறைப்பாடுகளைப் பெறுதல், தரவுகளைச் சேகரித்தல், காணாமற்போனோர் பற்றிய தகவல்களைக் கொண்டுள்ள தரவுத்தளமொன்றை அமைத்தல் ஆகியவற்றுக்கான அதிகாரங்களை OMP கொண்டுள்ளது[47]. அதன்படி, பலவித மூலங்களிலிருந்து பெறப்படும் தகவல்களை ஆராய்ந்து, சரியார்த்து அவற்றைத் தரவுத்தளமொன்றில் பேணுவதை OMP தொடர்கிறது. அதேவேளையில், அது குடும்பங்களுடன் தொடர்புகொண்டு, அவர்களது அன்புக்குரியவர்கள் காணாமற்போயுள்ள தகவல் கிடைக்கப்பெற்றதை உறுதிப்படுத்துகிறது. மேலும், முதற் தடவையாக, காணாமற்போனோர் குறித்துச் சேகரிக்கப்பட்ட தகவல்களை, முறைப்பாடுகளினதும் ஏனைய தகவல்களினதும் பட்டியலொன்றைப் பிரசுரித்ததன் மூலம், OMP பொதுவெளியில் பகிர்ந்துள்ளது[48].

அ. காணாமற்போன ஆட்கள் குறித்த தற்போதுள்ள தரவுகளைத் தொகுத்தல்

மற்றைய அரச நிறுவனங்கள், அமைப்புகள், அரச திணைக்களங்கள், விசாரணை ஆணைக்குழுக்கள், ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஆகியவற்றால் முன்னர் மேற்கொள்ளப்பட்ட செயன்முறைகளிலிருந்து, காணாமற்போனோர் பற்றிய தகவல்களைத் தொகுப்பதற்கும், அவ்வாறான தரவுகளை தரவுத்தளமொன்றில் மத்தியமயப்படுத்துவதற்கும் OMP சட்டத்தின் பிரிவு 10(1)(e) இன்படி OMP நேரடியான ஆணையைக் கொண்டுள்ளது. அது அமைக்கப்பட்டதிலிருந்து, OMP ஆனது, முப்படைகளிலிருந்தும், பொலிஸிலிருந்தும், மற்றைய அரச நிறுவனங்களிலிருந்தும், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் குறித்த ஐக்கிய நாடுகள் செயலணியிலிருந்தும் (UNWGEID) பெறப்பட்ட தகவல்களைத் தொகுத்துள்ளது.

எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கிய 14,700[49] தரவுத்தாள்கள் 2018 மார்ச் 15 இல் OMP இற்குக் கையளிக்கப்பட்டதுடன், 2021 முழுவதும் கோவைகள் தொடர்ச்சியாக தரவுத்தளத்தில் உள்ளீர்க்கப்பட்டன. காணாமற்போனோர் குறித்த ஒரு முக்கியமான தரவு மூலமாக முன்னைய விசாரணை ஆணைக்குழுக்கள் உள்ளன. முன்னர் ஆகக்குறைந்தது இவ்வாறான

---

[47] OMP சட்டத்தின் பிரிவு 10(1)(e).

[48] காணாமற்போனோருக்கான அலுவலகம் "பிரசுரங்கள்" http://www.ompsrilanka.org/omp-documents/omp-publications 2020 டிசெம்பர் 12 இல் காணப்பட்டவாறு.

[49] 2018 வருடாந்த அறிக்கையின் பந்தி 3.16, MNR இலிருந்து 14,641 கோவைகளை OMP பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும், மீளாய்வு மற்றும் கோவைகளை மீள எண்ணுதலைத் தொடர்ந்து, அவ்வெண்ணிக்கை 14,700 ஆக அதிகரித்தது.

ஒன்பது ஆணைக்குழுக்கள் இருந்ததுடன்[50], அவற்றுள் பல பொது அறிக்கைகளை வெளியிட்டிருந்தன, எனினும், மற்றையவற்றின் இறுதி அறிக்கைகள் கொவிட் முடக்கத்தாலும், பணியாளர் பற்றாக்குறையாலும் வெளியிடப்படுவதில் தாமதத்தை எதிர்கொண்டன.

காணாமற்போனோரது குடும்பங்களிலிருந்துநேரடியாகப் பெறப்பட்ட தகவல்கள் உள்ளிட்ட, முன்னைய விசாரணை ஆணைக்குழுக்களது காணாமற்போனோர் குறித்த பதிவுகள், தேசிய சுவடிகள்கூடத் திணைக்களத்தில் முப்பது வருடங்களாக ஜனாதிபதியின் முத்திரையின் கீழ் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன. OMP யின் 2019 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று, இந்த அறிக்கைகளைப் பெறுவதற்கு, OMP ஜனாதிபதியின் அடுத்தடுத்த செயலாளர்களிடமிருந்து அனுமதி பெற்றுள்ளது[51]. மேலும், 2019 மே 24 ஆம் திகதிய கடிதத்தின்படி, தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்திற்குப் பொறுப்பான வீடமைப்பு, கட்டுமான மற்றும் கலாசார அமைச்சு மேற்படி செயற்பாட்டைத் தொடரும்படி அத் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. இவ்வாறான அறிவுறுத்தல்களின் பிரகாரம், 2019 ஜூலை 22 ஆம் திகதியன்று OMP ஆனது அத் திணைக்களத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைச் செய்துள்ளது. ஆயினும், 2021 இல் மேற்படி திணைக்களத்திலிருந்து உரிய தெளிவூட்டல் கிடைக்காததால், அந்த ஒப்பந்தத்தைக் கைக்கொள்வதில் OMP இற்கு இயலாதிருந்தது.

OMP யின் வேண்டுகோளின்படி, முப்படையினரும் யுத்தத்தில் காணாமற்போனதாகக் கருதப்படும் படையினரது பட்டியல்களை வழங்கியுள்ளனர். இலங்கைப் பொலிஸாரிடமிருந்து அவ்வாறான பட்டியலை OMP இன்னும் எதிர்பார்க்கிறது. ஆயினும், காணாமற்போனோர் பற்றி இலங்கைப் பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய தகவல்களை OMP பெற்றுள்ளது.

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான செயற்பாட்டுக் குழு (WGIED) இலங்கையிலிருந்து காணாமற்போன ஆட்கள் பற்றிய எல்லா அறிக்கைகளையும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சிற்கு அனுப்பியுள்ளது. 2019 இல் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, 6,066 தெளிவுபடுத்தப்படாத அறிக்கைகள் மற்றும் 6,598 தெளிவுபடுத்தப்பட்ட அறிக்கைகள் உள்ளிட்ட, 12,664 முறைப்பாடுகள் பற்றிய அறிக்கைகளை OMP இற்கு அனுப்பியது[52]. ஐக்கிய நாடுகள் சபைச் செயற்பாட்டுக் குழுவின் (UNWG) வேண்டுகோளின் பிரகாரம், அதனுடைய 6,538 சம்பவங்களுடன் சேர்த்து, OMP யும் 2021 இல் 1,044 அறிக்கைகளைத் தயாரித்தது.

2021 நொவெம்பரில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் ஆகிய இடங்களிலுள்ள 96 குடும்பங்களுக்கு விசாரணைகளுக்காக OMP கடிதங்களை அனுப்பியதுடன், அவர்களில் 86 குடும்பங்கள் டிசெம்பரில் விசாரணைக்கு சமூகமளித்தனர். அவ்வாறே கொழும்பிலும்

---

[50] ஒன்பது விசாரணை ஆணைக்குழுக்களும் பின்வருமாறு: 2013 இல் தாபிக்கப்பட்ட காணாமற்போனோர் பற்றிய முறைப்பாடுகளை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு (பரணகம ஆணைக்குழு எனவும் அறியப்பட்டது); 2011 இல் தாபிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கானதும் விசாரணைக்குமான ஆணைக்குழு; 2006 இல் தாபிக்கப்பட்ட, நாடு முழுவதிலும் மரணங்களை ஏற்படுத்தியதும் சிவிலியன்கள் மீதானதுமான கடத்தல்கள், காணாமற்போதல்கள் மற்றும் தாக்குதல்கள் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு (மகாநாம திலகரட்ண ஆணைக்குழு எனவும் அறியப்பட்டது); 1998 இல் தாபிக்கப்பட்ட, சுயாதீனமாக அகற்றப்பட்டுக் காணாமற்போன ஆட்கள் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு (தீவு முழுவதற்குமான ஆணைக்குழு எனவும் அறியப்பட்டது); 1995 இல் தாபிக்கப்பட்ட, பட்டலந்த விடமைப்புத் திட்டத்திலிருந்த தடுப்பு முகாமில், சட்டவிரோதமாகக் கைது செய்யப்பட்டு அடைத்துவைத்துக் காணாமலாக்கப்பட்ட ஆட்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு; மத்திய, வடமேற்கு, வடமத்திய, ஊவா மாகாணங்களில் சுயாதீனமாக அகற்றப்பட்டுக் காணாமற்போன ஆட்கள் பற்றிய ஜனாதிபதி விசார்ணை ஆணைக்குழு (1994 இல் தாபிக்கப்பட்டது); 1994 இல் தாபிக்கப்பட்ட, மேற்கு, தெற்கு, சபரகமுவ மாகாணங்களில் சுயாதீனமாக அகற்றப்பட்டுக் காணாமற்போன ஆட்கள் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு; 1991 இல் தாபிக்கப்பட்ட சுயாதீனமாக அகற்றப்பட்டுக் காணாமற்போன ஆட்கள் பற்றிய ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு - இதற்கு 1992 இலும் 1993 இலும் புதிய ஆணைகள் வழங்கப்பட்டன.

[51] காணாமற்போனோருக்கான அலுவலகம், வருடாந்த அறிக்கை, பந்தி 3.15 – 3.16 (வருடாந்த அறிக்கை 2020).

[52] WGIED இன் பிரகாரம், காணாமற்போன ஒருவர் பற்றிய அறிக்கைக்கு அரசாங்கம் தகவல்களைத் தரத் தவறும்போது, அது "தெளிவுபடுத்தப்படாதது" என வகைப்படுத்தப்படுகிறது. அவ்வாறான தகவல்கள் வழங்கப்படும்போது, அது "தெளிவுபடுத்தப்பட்டது" என வகைப்படுத்தப்படுகிறது.

மாத்தறையிலுமுள்ள 17 குடும்பங்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களுக்கு 14 பேர் விசாரணைக்கு சமூகமளித்தனர்.

ஆ. முறைப்பாடுகள்

காணாமற்போன ஆட்கள் தொடர்பான முறைப்பாடுகளை அவ்வாறான ஒருவரது உறவினரிடமிருந்தோ, அல்லது எவரொருவரிடமிருந்தோ, அல்லது எந்தவொரு அமைப்பிடமிருந்தோ பெற்றுக்கொள்வதற்குரிய அதிகாரம் OMP இற்கு உள்ளது[53]. இது தாபிக்கப்பட்டதிலிருந்து 2021 டிசெம்பர் வரை, OMP யின் தலைமை அலுவலகமும் பிராந்திய அலுவலகங்களும் 2,787 முறைப்பாடுகளை காணாமற்போனோரது குடும்பங்களிலிருந்து நேரடியாகப் பெற்றுக்கொண்டது. இதில், கொழும்பிலுள்ள OMP தலைமை அலுவலகம் 2021 ஜனவரியிலிருந்து டிசெம்பர் வரை பெற்றுக்கொண்ட 56 கடிதங்களும் அடங்கும். இந்த 56 முறைப்பாடுகளில் 38 முறைப்பாடுகள் புதிய தரவுப் படிவங்களை தொலைபேசி மூலம் கேட்டமையும், நேரடி ஆலோசனைக்காக நேரில் வருகை தந்த 16 பேரும் உள்ளடங்கும். ஆயினும், கொவிட் 19 காரணமான பணியாளர் கட்டுப்பாடுகள் முறைப்பாடுகளைக் கையாள்வதைக் கட்டுப்படுத்தின.

முறைப்பாடுகளைக் கையாள்வதற்கான செயன்முறையில், காணாமற்போனோர் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொண்டதாக, காணாமற்போனோரது குடும்பங்களுக்கு எழுத்தில் உறுதிப்படுத்தி அறியத்தருதலும் தேவைப்படுத்தப்பட்டுள்ளது. OMP யின் முன்னோடி இடைக்கால அறிக்கையின்படி, 2021 ஜனவரியில், இடைக்கால அறிக்கையைக் கோரிய 350 விண்ணப்பதாரிகளுக்குரிய விண்ணப்பங்களையும், கண்டி மற்றும் கம்பகா மாவட்டங்களிலுள்ள தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கான கிடைத்தமை பற்றிய கடிதங்களையும் OMP அனுப்பியுள்ளது.

10,392 முறைப்பாடுகள் கிடைத்தமை பற்றிய கடிதங்களை OMP ஆனது, 2021 டிசெம்பர் 31 வரையில் குடும்பங்களுக்கு அனுப்பியுள்ளது. ஆயினும், மீதியாகவுள்ள 4,351 கடிதங்கள் 2021 இல் உள்ளன. தமிழ் பேசும் பணியாளர்கள் இல்லாமை இதில் பெரும் தடையாக உள்ளது. கிடைத்தமை பற்றிய கடிதங்கள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

மாவட்டம்	கிடைத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை	கிடைத்தமை அறியத்தரப்பட்ட முறையாடுகளின் எணணிக்கை	கிடைத்தமை அறியத்தரப்பட வேண்டிய முறையாடுகளின் எணணிக்கை
அம்பாறை	566	209	357
அனுராதபுரம்	273	273	00
பதுளை	6	6	00
மட்டக்களப்பு	4157	1385	2727
கொழும்பு	130	128	02
காலி	297	297	00
கம்பகா	261	249	12
அம்பாந்தோட்டை	393	393	00
யாழ்ப்பாணம்	2106	1974	132
களுத்துறை	190	190	0

[53] OMP சட்டத்தின் பிரிவு 12(a).

கண்டி	582	582	00
கேகாலை	109	109	00
கிளிநொச்சி	1010	869	141
குருணாகலை	387	387	00
மன்னார்	488	488	00
மாத்தளை	292	292	00
மாத்தறை	555	555	00
மொனராகலை	76	51	25
முல்லைத்தீவு	528	466	62
நுவரெலியா	16	14	02
பொலொன்னறுவை	343	343	00
புத்தளம்	85	81	04
இரத்தினபுரி	221	221	00
திருகோணமலை	1349	622	727
வவுனியா	568	408	160
மொத்தம்	14,088	10,592	4,351

முறைப்பாடுகளை OMP மூன்று கட்டங்களில் வகுப்பாக்கம் செய்துள்ளது (கட்டம் I – 2000 2021 / கட்டம் II – 1999 - 1990 / கட்டம் III – 1990 இற்கு முந்தியவை) மற்றும், 6,086 சம்பவங்கள் 2000 இற்கும் 2021 இற்கும் (கட்டம் I) இடைப்பட்டவை என அடையாளங்காணப் பட்டுள்ளன. இந்த 6,086 சம்பவங்களில் 5300 இற்கு, காணாமற்போனோரது குடும்பங்களுக்கு தகவல்களை / ஆவணங்களைக் கோரி கடிதங்கள் 154 இற்கு ஆரம்ப தரவுப் படிவத்தில் காணப்படாத காணாமற்போன திகதியை உறுதிப்படுத்தக் கோரிய கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

2021 இல் OMP தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்த குடும்பங்கள் பின்வருமாறு:

மாதம் (2021)	தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்த குடும்பங்களின் எண்ணிக்கை
ஜனவரி	05
பெப்ருவரி	-
மார்ச்	-
ஏப்ரல்	04
மே	-
ஜூன்	-
ஜூலை	01
ஆகஸ்ட்	-
செப்தெம்பர்	-
ஒக்தோபர்	05
நொவெம்பர்	-
டிசெம்பர்	01
மொத்தம்	16

இ. காணாமற்போனஆட்களின் தரவுப் படிவம்

காணாமற்போனஆட்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்காக OMP யால் பயன்படுத்தப்படும் காணாமற்போன ஆட்களின் தரவுப் படிவம் பல மட்டங்களைக் கொண்டுள்ளது. 2018 இல் அது முன்னோடியாக ஆரம்பிக்கப்பட்டு, 2019 இல் கிடைத்த பின்னூட்டங்களால் புதுப்பிக்கப்பட்டு இறுதிப்படுத்தப்பட்டு, 2020 இல் OMP யின் சபையால் அங்கீகரிக்கப்பட்டதுடன் தற்போது பாவனையிலுள்ளது. இது மூன்று மொழிகளிலும் உள்ளது. காணாமற்போன ஆட்களது அறிக்கைகளைத் தயாரிப்பதற்குரிய ஆகக்குறைந்த தரவுகளைப் பெறுவதற்காக சர்வதேச தரத்தில் தயாரிக்கப்பட்டதுடன், இலங்கைக்கேயுரிய தனித்துவமான தேவைகளுக்கேற்ப தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக, மிகவும் இலகுபடுத்தப்பட்ட காணாமற்போன ஆட்களின் தரவுப் படிவம் OMP யின் சபையால் அங்கீகரிக்கப்பட்டதுடன் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கிடைக்கின்றது.

ஈ. தரவுத்தளம்

OMP சட்டத்தின் கீழ், தரவுத்தளமொன்றை உருவாக்கி, முகாமைத்துவம் செய்து, பேணுவதற்காக OMP அதிகாரமளிக்கப்பட்டுள்ளதுடன், அது காணாமற்போனோர் பற்றிய எல்லா விபரங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும்[54]. மேலும் அதிலுள்ள தரவுகளைப் பாதுகாப்பதற்கான தொழில்நுட்ப ரீதியான பாதுகாப்பு உட்பட, எல்லாப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்[55].

காணாமற்போனோர் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெற்றதன்பேரில், அவற்றைத் தரவுத்தளத்தில் சேர்ப்பதற்கு முன்னதாக, OMP அவற்றை மதிப்பாய்வு செய்வதில் ஈடுபடுகிறது. இவ்வாறான மதிப்பாய்வில் தரப்பட்ட தகவல்களின் சரியான தன்மை, OMP யின் ஆணைக்குள் காணாமற்போனவரது தகவல்கள் பொருந்துகின்றனவா, இரட்டையானவை உள்ளனவா போன்றன உள்ளடங்குகின்றன.

காணாமற்போன திகதியும் இடமும் உள்ளிட்ட சூழ்நிலைத் தகவல்கள் மற்றும் முறைப்பாட்டிலுள்ள தகவல்கள் ஆகியவற்றைப் பரிசோதிப்பதன் மூலம் காணாமற்போன ஒருவர் தனது ஆணைக்குள் வருகிறாரா என்பதை OMP உறுதிப்படுத்திக் கொள்கிறது. OMP யின் ஆணைக்கு வெளியே அவ்வாறான ஒருவர் வருவாராயின், முறைப்பாட்டாளருக்கு அதை அறிவித்து, தேவையானபோது, அந்த முறைப்பாடு சென்றடைய வேண்டிய மற்றைய அரச நிறுவனத்திற்கு அத்தகவலை வழங்குகிறது. அவ்வாறான சந்தர்ப்பங்களில், OMP யின் ஆணைக்குள்ளேதான் அக் காணாமற்போனவர் வருகிறார் என்பதை உறுதிப்படுத்துவதற்கு வேண்டிய மேலும் தகவல்களை வழங்குவதற்கு முறைப்பாட்டாளருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறது. காணாமற்போனவர் OMP யின் ஆணைக்கு உள்ளே வருகிறார் என்பதை உறுதிப்படுத்துவதற்குரிய போதுமான தகவல்கள் இல்லாதபோது, உரிய குடும்பத்திடமிருந்து OMP மேலதிக தகவல்களைக் கோருகின்றது.

காணாமற்போனோர் தொடர்பான 39,416 அறிக்கைகளை OMP கையாண்டுள்ளது. 2021 டிசெம்பர் 31 வரை, காணாமற்போனோர் தொடர்பான 21,175 அறிக்கைகள் தரவுத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும், முறைப்பாடுகளை OMP மூன்று மட்டங்களில் வகுப்பாக்கம் செய்துள்ளதுடன், 6,086 சம்பவங்கள் 2000 இற்கும் 2021 இற்கும் இடையில் (கட்டம் I) நடைபெற்றதாக அடையாளங்காணப்பட்டுள்ளன. OMP குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திடமிருந்து 118,000 சம்பவங்களைத் தொகுத்துள்ளதுடன், 93 சம்பவங்கள் வெளிநாட்டுப் பிரயாணத்துடன் சம்பந்தப்பட்டவை எனக் காணப்பட்டுள்ளன. நட்டஈட்டு அலுவலகத்திடமிருந்து 12,500 சம்பவங்கள் தொகுக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் 760 சம்பவங்களுக்கு ஏற்கனவே நட்டஈடு வழங்கப்பட்டுள்ளதை OMP அடையாளங்கண்டுள்ளது. 2021 இல், பணியாளர் பற்றாக்குறை மற்றும் கொவிட் 19 தொடர்பான பிரயாணக் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுக்கு மத்தியிலும், முறைப்பாடுகளின் ஆகக்குறைந்த தகவல்களைத் தரவுத்தளத்தில் சேர்க்கும் வேலையைத் தொடருவதற்காக, தற்காலிக ஆளணியினர் அமர்த்தப்பட்டனர்.

---

[54] OMP சட்டத்தின் பிரிவு 13(1)(h).

[55] OMP சட்டத்தின் பிரிவு 15(3).

உ. காணாமற்போனோர் தொடர்பான தகவல்களும் முறைப்பாடுகளின் பட்டியலும்

இரகசியம் பேணல், மற்றும் தரவுகளைப் பாதுகாத்தல் தொடர்பான உரிய எல்லாச் சட்டங்களையும் கருத்திற்கொண்டு, பொதுமக்களது கவனத்திற்கு, காணாமற்போனோர் பற்றிய பிரச்சினைகள் மீதான தகவல்களைப் பிரகரிப்பதற்கான அதிகாரம் OMP இற்கு உள்ளது[56]. 2021 ஆம் ஆண்டில் கொவிட் 19 முடக்கல்களும் பிரயாண மட்டுப்பாடுகளும் இருந்தாலும், பெறப்பட்ட தகவல்களைத் தொகுப்பதில் ஈடுபாடு காண்பிக்கப்பட்டது. இக்காலகட்டத்தினுள் இதற்குரிய அலகு ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்படாதிருந்த உரிய தகவல்களைப் பெறுவதற்காகக் குடும்பங்களை அணுகியது.

8.5 மனிதவளமும் நிர்வாகமும்

OMP ஆனது தனது முக்கிய பலத்தையும் வளத்தையும் கொழும்பிலுள்ள தனது தலைமை அலுவலகத்திலும், கிளிநொச்சி, மன்னார், மாத்தறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள பிராந்திய அலுவலகங்களிலும் அதிக அளவில் பயன்படுத்தியது. பிராந்திய அலுவலகங்கள் தாபிக்கப்பட்டமையானது, பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் குடும்பங்களை இலகுவாக அணுகுவதில் வசதியை ஏற்படுத்தியது. எல்லா நேரங்களிலும், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உணர்வுபூர்வமாகவும், மரியாதையுடனும் நடாத்தப்படுவதை உறுதிப்படுத்துவதில் OMP அர்ப்பணிப்புச் செய்துள்ளது.

தனது இயலுமையை மட்டுப்படுத்திய மற்றும் பாதீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகள் தொடர்பான பல்வேறு விதிகள் மற்றும் உபவிதிகள் காரணமாக, முக்கிய பதவிகளுக்கு பணியாட்தொகுதியினரை ஆட்சேர்ப்புச் செய்வதிலும் அவர்களைத் தொடர்ந்து வைத்திருப்பதிலும் OMP குறிப்பிடத்தக்க சவால்களைச் சந்தித்துள்ளது. இதற்கு மேலதிகமாக, கொவிட் 19 காரணமாகவும் OMP யின் நிறுவன முன்னேற்றம் 2021 இல் தடைப்பட்டது.

OMP யின் முதலாவது தவிசாளர் திரு. சாலிய பீரிஸ் (ஜனாதிபதி சட்டத்தரணி) அவர்களும் சபை அங்கத்தவர்களும் OMP யை நிலைநிறுத்துவதிலும் முன்னேற்றுவதிலும் முக்கிய இடங்களை வகித்ததுடன், அவசியமான பணிகளை மேற்கொள்வதில் பல்வேறு மட்டங்களில் செயலாற்றினர். இச் சபை தனது கூட்டங்களை ஒழுங்காக நடாத்தி மூலோபாய அபிவிருத்திகள் பற்றிக் கலந்துரையாடியதுடன், 2021 இல் முடக்கங்களுக்கும் பிரயாணக் கட்டுப்பாடுகளுக்கும் மத்தியில் 15 கூட்டங்களை நடாத்தியது. OMP யின் சபை அங்கத்தவர்கள் அதன் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்பார்வை செய்ததுடன், அலகுகளின் தலைமைப் பதவிகள் நிரப்பப்படாத இடங்களில் அல்லது அவ்வாறான அலகுகள் உருவாக்கப்படாத இடங்களில் பணியாளர்களுடன் சேர்ந்து பணியாற்றினர். மேலும், ஆணையாளர்கள் விசாரணைகள் நடாத்துவதில் பங்குகொண்டதுடன், களப் பயணங்களையும் மேற்கொண்டு குடும்பங்களுடன், சிவில் சமூகங்களுடன், மற்றைய அரச அலுவலர்களுடன் சேர்ந்து பணியாற்றி OMP யின் சேவைகளை முன்னேற்றுவதில் கவனஞ் செலுத்தினர்.

அ. ஆட்சேர்ப்பு

OMP உருவாக்கப்பட்டதிலிருந்து, அது தனது பலத்தையும், வளத்தையும், காலத்தையும் தகைமையுள்ள மற்றும் அனுபவமுள்ள பணியாட்தொகுதியை ஆட்சேர்ப்புச் செய்வதில் வெற்றிடங்களை நிரப்புவதில் பயன்படுத்தியுள்ளது.

இந்த அறிக்கைக்குரிய காலப்பகுதியில், விண்ணப்பதாரிகளது விண்ணப்பங்களை மதிப்பாய்வு செய்தும், அவர்களுக்கு நேர்முகப் பரீட்சைகளை நடாத்தியும் உள்ளதுடன், உரிய திறன்களையும் அனுபவத்தையும் கொண்டுள்ளோரை ஈர்ப்பதற்காக, தனது பதவிகளை மீளமைப்பதற்கு முயன்றுள்ளது. அவ்வாறான தீர்மானங்களை அடிப்படையாகக் கொண்டு, பதவிகளின் பெயர்களிலும் கடமைகளிலும் பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன: மனிதவள மற்றும் நிர்வாகத் தலைவர் (HM 1-1), நிதி மற்றும் கொள்வனவுத் தலைவர் (HM 1-1), சபைக்குரிய செயலாளர் / சிரேஷ்ட சட்ட அலுவலர் (HM 1-1), சிரேஷ்ட சட்ட அலுவலர் (HM 1-1), சட்ட அலுவலர் (JM 1-1) ஆகியவற்றுக்கான விபரங்கள் நீதி அமைச்சினூடாக முகாமைத்துவ

[56] OMP சட்டத்தின் பிரிவு 13(1)(k)(v).

சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டதுடன், இந்தச் செயன்முறை இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை.

2021 ஆம் ஆண்டு பூராகவும், ஏழு பதவிநிலை அலுவலர்கள் மற்றையவர்களுக்கு இடமளித்து, தமது பதவிகளை விட்டு விலகியதுடன், ஒப்பந்த அடிப்படையில் கடமையாற்றிய ஒரு பதவிநிலை அலுவலர் தனது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்ததுடன், அமைச்சொன்றிலிருந்து விடுவிக்கப்பட்டுப் பணியாற்றிய இன்னோரு பதவிநிலை அலுவலர் தனது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்தார்.

ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் கௌரவ உபாலி அபேரத்ன, அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் OMP யின் தவிசாளராக 2020 நொவெம்பர் 30 இலிருந்து 2021 டிசெம்பர் 10 வரை நியமிக்கப்பட்டார். திரு. மகேஷ் கட்டுலந்த (சட்டத்தரணி) அவர்கள் 2021 டிசெம்பர் 16 ஆம் திகதியிலிருந்து OMP யின் தவிசாளராக நியமிக்கப்பட்டுள்ளார். புதிய சபை அங்கத்தவர்கள் பற்றிய விபரம் பின்வருமாறு:

#	முழுப் பெயர்	பதவி	நியமனத் திகதி
1	திரு. மகேஷ் கட்டுலந்த (சட்டத்தரணி)	தவிசாளர்	2021 டிசெம்பர் 16
2	திரு. விஜேகூன் பண்டார கணேகல	சபை அங்கத்தவர்	2021 ஏப்ரல் 29
3	திருவாட்டி. சித்தி டேன் அர்ஃபா தாசிம்	சபை அங்கத்தவர்	2021 ஏப்ரல் 29
4	திரு. தம்பிஐயா யோகராஜா	சபை அங்கத்தவர்	2021 மே 06
5	கலாநிதி. ஜயந்தா விக்ரமரட்ண	சபை அங்கத்தவர்	2021 டிசெம்பர் 16
6	திரு. சிராஷ் எம். நூர்தீன்	சபை அங்கத்தவர்	2021 டிசெம்பர் 23

ஆ. பிராந்திய அலுவலகங்கள்

OMP யின் பிராந்திய அலுவலகங்கள் இடைக்கால அறிக்கைகள், முறைப்பாடுகளைப் பெறல், குடும்பங்களின் வருகை, உரிய அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுடன் கூட்டங்களை நடாத்துதல் ஆகியவற்றுக்கு உதவின.

பிராந்திய அலுவலகங்களுக்கான குடும்பங்களின் வருகை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு:

பிராந்திய அலுவலகம்	2021 இல் வருகையாளர்களின் எண்ணிக்கை
மாத்தறை	485
மன்னார்	654
யாழ்ப்பாணம்	344
மட்டக்களப்பு	455
கிளிநொச்சி (2021 ஆகஸ்ட்டிலிருந்து)	55
மொத்தம்	1993

இ. குடும்பங்களுக்கான சமூக-உளவள மற்றும் உணர்வுபூர்வமான பொறுப்புகளை உறுதிப்படுத்துதல்.

2020 இலிருந்து சபையால் கடைப்பிடிக்கப்பட்ட சமூக-உளவள மூலோபாயத்துடனான அதன் ஆணையை OMP தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துகிறது. குடும்ப அங்கத்தவர்கள் OMP அலுவலகத்திற்கு வருகை தரும்போது, முதலாவதாக அவர்கள், தலைமை அலுவலகத்திலும் பிராந்திய அலுவலங்களிலும் குடும்பங்களுக்கு உதவும் அலுவலர்களையே சந்திப்பர்.

இவ்வலுவலர்கள் குடும்ப அங்கத்தவர்களையும் பொதுமக்களையும் நேரடியாகச் சந்தித்து, அவர்களது முறைப்பாடுகளைப் பெறுபவர்களாகவும், தகவல்களை வழங்குபவர்களாகவும், மற்றைய அலகுகளுடன் தொடர்புபடுத்துபவர்களாகவும், தொடர் நடவடிக்கை எடுப்பவர்களாகவும் உள்ளனர்.

இந்த வருடத்தினுள் OMP பாதிக்கப்பட்டவர்களுடனும் அவர்களது குடும்பங்களுடனும் ஆலோசனைகளை நடாத்தியுள்ளது. கொவிட் 19 பெருந்தொற்று காரணமான பொதுமக்களது சுகாதாரமும் பாதுகாப்பும் குறித்த கட்டுப்பாடுகள் காரணமாக, இதன் முன்னேற்றம் இன்னும் தடைப்பட்டுள்ளது.

ஈ. திறன் அபிவிருத்தியும் அறிவைப் பகிர்தலும்

2021 ஆம் ஆண்டினுள் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்துடன் இணைந்து, சட்ட அலுவலர்களல்லாத அலுவலர்களுக்கு 5S தொடர்பான பயிற்சிநெறியொன்று நடாத்தப்பட்டது. அவ்வாறே 2022 இல் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்துடன் இணைந்து MM11, JM11 மற்றும் MA 11 ஐச் சேர்ந்த சேவையினருக்கு வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளை நடாத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

உ. தகவலறியும் உரிமை

2016 இன் 12 ஆம் இலக்க, தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், OMP யின் தகவல்களை அணுகும் உரிமை உறுதிப்படுத்தப்பட்டது. பின்வரும் அட்டவணையானது, 2021 இல் கிடைத்த தகவலறியும் உரிமையின் கீழான விண்ணப்பங்கள் எவ்வாறு கையாளப்பட்டன என்பதைத் தெரிவிக்கின்றது.

இல	விடயம்	நாட்களின் எண்ணிக்கை
1	2021 இல் கிடைத்த தகவல் கோரிக்கைகள்	28
2	முழுமையாக தகவல்கள் வழங்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	28
3	பகுதியளவில் தகவல்கள் வழங்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை	0
4	சட்டத்தின் பிரிவு 5 இன் பிரகாரம், தகவல்கள் மறுக்கப்பட்ட அல்லது ஏற்கப்படாத கோரிக்கைகளின் எண்ணிக்கை	1
5	சட்டத்தின் பிரிவு 5 இன் பிரகாரப்படி அல்லாது, மற்றைய காரணங்களுக்காக தகவல்கள் மறுக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை (உ-ம்: தகவல்கள் இல்லாமை போன்றன)	0
6	தகவலைக் கோரும் விண்ணப்பமொன்றுக்கு எடுக்கப்பட்ட சராசரியான கால அளவு (வேலை நாட்களின் எண்ணிக்கை)	14 days
7	தபால் மூலம் கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை	28
8	மின்னஞ்சல் மூலம் கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை	0
9	வேறு வழிகள் மூலம் கிடைத்த கோரிக்கைகளின் எண்ணிக்கை	0

2021 இல் OMP அங்கத்தவர்கள் 15 சபைக் கூட்டங்களை நடாத்தியதுடன், அதன் மூலோபாய அபிவிருத்திகள் குறித்தும் கலந்துரையாடினர். அதன் பயனாக, பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இலகுவில் OMP ஐ அணுகும் வகையில், 5 ஆவது பிராந்திய அலுவலகத்தைக் கிளிநொச்சியில் திறப்பதற்கு OMP யின் சபை தீர்மானித்து, 12.08.2021 இல் அவ்வலுவலகம் திறக்கப்பட்டது.

மாவட்ட மட்டத்தில் விசாரணைகளை நடாத்தி, இடைக்கால அறிக்கைகளை வழங்கும் செயன்முறையை நடைமுறைப்படுத்துவதற்காக, தேவையான பதவியணியினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அங்கீகாரம் அமைச்சரவையால் OMP இற்கு வழங்கப்பட்டிருப்பினும், அவ்வாறான ஆட்சேர்ப்புகள் இடம்பெறவில்லை. அதனால், பயிற்றப்பட்ட விசாரணை

அலுவலர்களைக் கொண்டு, நடமாடும் விசாரணை அலகுகள் மூலம் மாவட்ட மட்டத்தில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்ட விசாரணைகளைக் கைவிடுவதற்கு OMP நிர்ப்பந்திக்கப்பட்டது.

குடும்பங்களிலிருந்து கிடைத்த இடைக்கால அறிக்கைக் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்காக, OMP யின் தற்போதைய ஆளணியிலிருந்து நான்கு பேரை பகுதி நேர விசாரணையாளர்களாக பிராந்திய அலுவலகங்களுக்கு அனுப்பும் செயன்முறையொன்று தாபிக்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக, இச் செயன்முறை, கொவிட் 19 பெருந்தொற்று காரணமான முடக்கல்களும் பிரயாணக் கட்டுப்பாடுகளும் காரணமாக, மேலும் தாமதிக்கப்பட்டது.

8.6 நிதியும் கொள்வனவுகளும்

2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கை இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, பணியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதிலும், பெருந்தொற்று காரணமாகவும் இருந்த பல்வேறு தடைகள் காரணமாக, திட்டமிட்டவாறு நிகழ்ச்சித்திட்டங்களிலும், நிர்வாகப் பணிகளிலும் OMP யால் நிதி இலக்குகளை அடைய முடியவில்லை. எனவே, ஆண்டின் இறுதியில் புதிய தவிசாளரது நியமனம் அலுவலகத்தின் இலகுவான செயற்பாட்டை உறுதிப்படுத்தியதால், அவரால் நிதி மற்றும் கொள்வனவுகள் மீதான குறித்ததொரு கண்ணோட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

8.7 தொடர்பாடலும் அடைவும்

காணாமற்போனோர் தொடர்பான காரணங்கள், சம்பவங்கள், தாக்கங்கள் குறித்து பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கான ஆணையுடனான பணியையும் அவர்களது உறவினர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான பொதுசன ஆதரவைக் கட்டமைக்கும் பணியையும் OMP கொண்டுள்ளது[57]. 2018 இல் OMP தாபிக்கப்பட்டதிலிருந்து, தனது ஆணையினதும் வேலைகளினதும் பற்றிய விழிப்புணர்வூட்டுதலை அதிகரிப்பதற்கான தொடர்பாடல் மற்றும் அடைவு மூலோபாயத்தை அது தயாரித்துள்ளது; காணாமற்போவதால் ஏற்படத்தக்க விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை உருவாக்கியுள்ளது; காணாமற்போனாரதும் அவர்களது குடும்பத்தினரதும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சமூகத்திற்கும் அரசுக்கும் உள்ள பொறுப்புணர்வைத் தெரிவித்துள்ளது; தன்னைப் பற்றி உள்ள பிழையான கருத்துருவாக்கத்தை நீக்கியுள்ளது. இதற்காக OMP, காணாமற்போனோரது உறவினர்களே முக்கிய பங்குதாரர்களாக உள்ளனர் என்பதை உறுதிப்படுத்தியுள்ளதுடன், OMP தனது வெளியீடுகளை அச்சு ஊடகம், எண்ணிம தொடர்பாடல் தளங்கள் ஆகியவை மூலம் வெளியிட்டுள்ளதால் பொதுமக்கள் அவற்றை அடைதல் இலகுவாக்கப்பட்டுள்ளது[58].

தொடர்பாடல் மற்றும் அடைவு அலகானது இன்னும் அமைக்கப்பட வேண்டியுள்ளதால், எல்லாச் செயற்பாடுகளும் உரிய அலகுகளால், வருடாந்தத் திட்டத்தில் அவற்றுக்கென ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளைக் கொண்டு, மேற்கொள்ளப்பட்டுக் கண்காணிக்கப்பட்டன. சபையின் அங்கத்தவர்கள் இந்த ஊடகத் தொடர்பாடல்களை மேற்பார்வை செய்தனர்.

அ. பொது நிகழ்வுகள்

கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக, எல்லா ஆட்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான பொது நிகழ்வெதையும் OMP யால் நடாத்த முடியவில்லை. ஆயினும், உள்ளக அலகுகளினதும், பங்குதாரர்களினதும், ஒற்றுமைக்கான கொத்தணியினதும் ஒருங்கிணைப்புடன் ஜூன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, காணாமற்போனோருக்கான சர்வதேச தின வைபவத்தை ஒழுங்குசெய்தது.

---

[57] OMP சட்டத்தின் பிரிவு 13 (j).

[58] Email: ompsrilanka@gmail.com; Twitter: https://twitter.com/ompsrilanka; Facebook: https://www.facebook.com/ompsrilanka

ஆ. ஊடகங்களுடனான தொடர்பு

மேற்படி வைபவத்தில் இடம்பெற்ற மெய்நிகர் கலந்துரையாடல்கள் எல்லா அச்சு, இலத்திரனியல், சமூக, தனியார், அரச ஊடகங்களிலும் வெளியிடப்பட்டன. விசேடமாக, OMP யின் தவிசாளரால், கௌரவ அமைச்சரால், பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சுரேன் ராகவன் அவர்களால் தெரிவிக்கப்பட்ட விடயங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டன.

இ. எண்ணிம மயப்படுத்துதல்

Twitter[59] இலும் Facebook[60] இலும் சமூக ஊடகக் கணக்குகளைப் பேணுவதில் OMP யால் முடிந்ததுடன், இவ்வாறான எண்ணிமத் தளங்களில் பொதுமக்களுடனான தொடர்புகளைப் பேண முடிந்தது. 2021 டிசெம்பர் 31 இல் Facebook இல் 5,149 பேரையும் Twitter இல் 1,866 பேரையும் தொடர்பாளர்களாகக் கொண்டுள்ளது.
2020 நொவெம்பர் 19 இல் OMP ஆங்கிலத்தில் தனது உத்தியோகபூர்வ இணையத்தளத்தைத்[61] திறந்ததுடன், தனது தகவல்களையும் பணிகளையும் பொதுமக்கள் இதன் மூலம் அறிந்துகொள்ள வழிசெய்தது. 2021 ஜனவரியில் சிங்களத்திலும் தமிழிலும் இந்த இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டது. 2021 டிசெம்பர் 31 இல் 50 வருகையாளர்கள் இந்த இணையத்தளத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

9.2021 இல் சந்தித்த சவால்கள்

2021 ஆம் ஆண்டில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. பொதுமக்களையும் காணாமற்போனோரது குடும்பங்களையும் அடைவதில் சந்தித்த பாரிய சவால்களாக கொவிட் 19 முடக்கல்களையும், பிரயாணக் கட்டுப்பாடுகளையும் குறிப்பிட முடியும்.

மேலும், கொள்கைகள் தொடர்பான உள்ளார்ந்த சவால்கள் காணப்பட்டன, விசேடமாக 2016 இன் 14 ஆம் இலக்க OMP சட்டத்தின் பிரிவு 11 (a) ஆனது, 2017 இன் 09 ஆம் இலக்கச் சட்டத்தால் நீக்கப்பட்டது. இந்தத் திருத்தத்தின் பிரகாரம், சட்டத்தின் ஏற்பாடு OMP யின் ஆணையை நிறைவேற்றுவதில் எந்தவொரு தனிநபருடனோ அல்லது அமைப்புடனோ செய்யப்படும் ஒப்பந்தங்களில் கவனஞ் செலுத்தியுள்ளதால், சுதந்திரமானதொரு அமைப்பாக அது செயற்படுவதில் சிரமங்களை எதிர்கொள்கிறது.

மேலும், மட்டுப்படுத்தப்பட்ட மனிதவளம் காரணமாக OMP கடும் சவால்களை எதிர்கொள்கிறது. சுதந்திரமானதொரு நிறுவனம் என்ற வகையில், அடுத்தடுத்த தலைமைத்துவ மாற்றங்களாலும் OMP சவால்களை எதிர்கொண்டது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை ஆட்சேர்த்தல் பாரிய சவாலாக இருந்தது. வருடத்தின் கடைசிக் காலாண்டில், புதிய தவிசாளரது தலைமைத்துவத்தின் கீழ், நீதி அமைச்சுடனும், மற்றைய அமைச்சுக்களுடனும், அதிகார பீடங்களுடனும், பங்குதாரர்களுடனும் மேற்படி சவால்களை வெற்றிகொள்தற்கான பேச்சுவார்த்தைகளை நடாத்தியது.

10.முன்னோக்கிய பாதை

புதிய தலைமைத்துவத்தின் கீழ், ஐந்து வருடங்களுக்கான முன்னோக்கிய பாதையை உருவாக்குவதை ஆரம்பித்துள்ளதுடன், வினைத்திறனான சேவை வழங்கலை

---

[59] "Office on Missing Persons Twitter Account" (24 June 2018) <https://twitter.com/ompsrilanka> accessed on 22 December 2020.
[60] "Office on Missing Persons Facebook Account" (23 October 2018) <https://www.facebook.com/ompsrilanka/> accessed 22 December 2020.
[61] "Office on Missing Persons Website" (19 November 2020) <www.ompsrilanka.org> accessed on 22 December 2020.

மேற்கொள்வதற்காக பணியாளர் ஆட்சேர்ப்பு, நன்கொடை வழங்குவோருடன் ஒருங்கிணைந்து செயலாற்றுதல், OMP இற்கு வழங்கப்பட்டுள்ள ஆணை குறித்த எட்டு விடயங்களில் அரச மற்றும் அரச சார்பற்ற செயற்பாட்டாளர்களையும் முகவர்களையும் உருவாக்குதல் ஆகியவற்றையும் ஆரம்பித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட தூதுக்குழு 2021 ஆகஸ்ட்டில் OMP யின் தவிசாளரைச் சந்தித்து, 27 சர்வதேச சமவாயங்களுக்கு இணங்க நடந்துகொள்வதாக இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளமைக்கு அமைவாக, அதன் முன்னேற்றத்தை அளவிட்டு, "விருப்பத்திற்கு மேலதிகமாகப் பொதுமைப்படுத்தப்பட்ட திட்டம்" (GSP+) பற்றிய வர்த்தகச் சலுகையை வழங்குவதற்கான விடயம் பற்றிக் கலந்துரையாடியது. கொவிட் 19 பெருந்தொற்றால் ஏற்பட்ட தடைகளைத் தாண்டி ஏற்பட்ட முன்னேற்ற நிலவரங்கள் குறித்த விபரங்களை தவிசாளர் முன்வைத்தார். தூதுக்குழு OMP யின் செயற்பாட்டு முன்னேற்றத்தில் தவிசாளரது பரந்த பங்களிப்பிற்காகத் தனது பாராட்டைத் தெரிவித்தது.

2021 ஆகஸ்ட்டில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழுவுடனான கூட்டமொன்றில், OMP யின் பயனுறுதி வாய்ந்த செயற்பாடுகளுக்காக முறைசார் பங்காண்மையைக் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தை முன்வைத்து, OMP யின் முன்னேற்றம் பற்றிய பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது. அவர்களது குழு இதன் சாத்தியமான தன்மைகள் பற்றிக் கலந்துரையாடி, தமது அபிப்பிராயங்களையும் பகிர்ந்துகொண்டது.

வெளிநாட்டு இராஜதந்திரிகள், மற்றும் நன்கொடை வழங்குவோர் ஆகியோரை மேலதிக கலந்துரையாடலுக்காகச் சந்தித்ததுடன், நீதி அமைச்சுடனும், வெளிநாட்டலுவல்கள் அமைச்சுடனும் இது தொடர்பான ஒருங்கிணைப்புகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிகமாக, ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்கள், வெளிநாட்டுத் தூதரகங்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு, அரச சார்பற்ற சர்வதேச அமைப்புகள், அரச சார்பற்ற உள்ளூர் அமைப்புகள், சிவில் சமூகம் ஆகியவற்றுடனும் OMP யின் தற்போதைய முன்னேற்றம் பற்றிய கலந்துரையாடல்கள் நிகழ்த்தப்பட்டன.

நிறைவேற்றுப் பணிப்பாளர், நிதி மற்றும் கொள்வனவுக்கான பணிப்பாளர், பட்டதாரிப் பயிலுனர்கள் ஆகியோரது நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்டச் செயலாளர்களுடனான, தொழிற்பயிற்சி அதிகாரசபையுடனான, பல்கலைக்கழகங்களுடனான, சமூக அபிவிருத்திக்கான தேசிய நிறுவகத்துடனான பேச்சுவார்த்தைகளை OMP முன்னெடுத்தது. இதற்கு மேலதிகமாக, சட்ட அலகில் பணிக்கமர்த்துவதற்காக, நான்கு சட்டப் பட்டதாரிகளை நீதி அமைச்சினூடாகப் பெறுவதற்கு பொது நிர்வாக அமைச்சுடனான பேச்சுவார்த்தை வெற்றியளித்தது.

1000 இற்கும் அதிகமான முறைப்பாடுகளைச் சமர்ப்பித்துள்ள மாவட்டம் ஒவ்வொன்றிலும், 2022 ஆம் ஆண்டில் புதிய பிராந்திய அலுவலகங்களைத் திறப்பதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது பொதுமக்கள் OMP ஐ இலகுவாக அணுகுவதற்கும், அதன் சேவைகளைப் பெறுவதற்கும் வழிவகுக்கும். அதன்படி இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பிராந்திய அலுவலகங்கள் 2022 இல் திறக்கப்பட முடியும்.

- 2022 - 2025 காலப்பகுதிக்கான இலக்குகள்
- குடும்பங்களுக்கு உதவுவதைப் பலப்படுத்துதல்
- திருகோணமலை / குருணாகலை பிராந்திய அலுவலகங்கள்
- இணையத்தளத்தை மேம்படுத்துதல்

11.நன்றி நவிலல்

OMP தனது இலக்குகளை அடைவதில், 2021 இல் முழுமையான ஒத்துழைப்பு வழங்கிய எல்லாப் பங்காண்மையாளருக்கும் நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறது. தனக்கு ஆதரவு நல்கிய அரசாங்கம், அமைச்சர், பதிவாளர் நாயகம் அலுவலகம், சட்டமா அதிபதி அலுவலகம், எல்லா மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலார்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஆகியோருக்கும் தனது நன்றிகளைத் தெரிவிக்கின்றது. OMP யின் ஆணைகளை நிறைவேற்ற உதவிய வெளிநாட்டு இராஜதந்திரிகளின் சமூகம், ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய

ஒன்றியம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு ஆகியன உட்பட்ட எல்லா அபிவிருத்திப் பங்காண்மையாளர்களினதும் முழுமையான ஆதரவினை நினைவு கூரும் அதேவேளை, அவர்களுக்கும் தனது நன்றிகளைத் தெரிவிக்கின்றது. அவ்வாறே, காணாமலாக்கப்பட்டோரது குடும்பங்களின் அமைப்பு, சமயத் தலைவர்கள் ஆகியோருக்கும் 2021 இல் வழங்கிய ஒத்துழைப்பிற்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது. குறிப்பாக அவர்களது ஒத்துழைப்பின்றி OMP தனது கடமைகளை நிறைவேற்ற முடியாதிருந்திருக்கும். ஊடகங்கள், ஊடகவியலாளர்கள், கல்வியாளர்கள் ஆகியோரது ஊக்கப்படுத்தல்களுக்காகவும் எமது நன்றிகள். இறுதியாக, நீதி அமைச்சினது பணியாளர்கள், OMP யின் குழுக்கள், தன்னார்வலர்கள், சபை அங்கத்தவர்கள் ஆகியோர் 2021 இல் பெற்றெடுத்த சாதனைகள் என்றும் நினைவுகூரத்தக்கவை.



காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம்

ஆண்டு நிதி அறிக்கை

2021

காணாமற்போனோருக்கான அலுவலகம்
2021 டிசெம்பர் 31 இல் நிதி நிலைமை

சொத்துக்கள்	குறிப்பு	2021 (ரூ)	2020 (ரூ)
நடைமுறையற்ற சொத்துகள்			
சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	1	22,284,177.16	28,102,075.67
சர்வதேச தின நினைவு வைபவம்			
நடைமுறைச் சொத்துகள்			
முன்னரே செலுத்தப்பட்ட செலவுகள்	2	110,693.32	36,108.00
பெறத்தக்கவை	3	663,015.35	365,330.40
மொத்தச் சொத்துகள்		**23,057,885.83**	**28,503,514.07**
பொறுப்புகள்			
நடைமுறையற்ற பொறுப்புகள்			
பணிக்கொடைக்கான ஏற்பாடு		1,354,447.50	743,120.00
நடைமுறைப் பொறுப்புகள்			
திரட்டிய செலவுகள்	4	3,843,088.34	4,312,609.44
கடன் கொடுத்தோர்	5	27,830.00	27,830.00
செலுத்தப்படத்தக்க சம்பளம்	6	24,603.13	24,603.13
மொத்தப் பொறுப்புகள்		**5,249,968.97**	**4,365,042.57**
தேறிய சொத்துகள் / மூலதனம்			
தேறிய சொத்துக்கள்	7	17,807,916.86	23,395,351.50
மொத்த மூலதனமும் பொறுப்புகளும்		**23,057,885.83**	**28,503,514.07**

சான்றளிப்பு
2021 டிசெம்பர் 31 இல் இருந்த நிலைமையை மேற்படி கணக்குக் கூற்றுகள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன எனச் சான்றளிக்கிறோம்.

.....
பீ. கே. சுசில் பெரேரா
பணிப்பாளர் (நிதி மற்றும் கொள்வனவு)

.....
டீ. சி. திசாநாயக்க
நிறைவேற்றுப் பணிப்பாளர்

நிதிக் கூற்றுகளின் தயாரிப்புக்கும் முன்னளிப்புக்கும் சபையின் பணிப்பாளர்களே பொறுப்பானவர்கள். அவர்களால் இவை அங்கீகரிக்கப்பட்டு அவர்களது சார்பில் கையொப்பமிடப்படுகிறது.

மகேஷ் கட்டுலந்த
தவிசாளர்

ரி. யோகராஜா
சபை அங்கத்தவர்
(ஆணையாளர்)

டபிள்யு. பீ. கணேகல
சபை அங்கத்தவர்
(ஆணையாளர்)

காணாமற்போனோருக்கான அலுவலகம்
2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமான மற்றும் செலவுக் கூற்று

	குறிப்பு	2021 (ரூ)	2020 (ரூ)
வருமானம்			
வரவு - நடைமுறை மாணியம்		76,804,556.45	81,300,000.00
மொத்த வருமானம்			**81,300,000.00**
செலவு			
ஆளணிச் செலவுகள்	8	33,011,432.94	39,520,158.83
பிரயாணச் செலவுகள்	9	1,784,134.03	2,845,326.00
வழங்கல்களும் பயன்படுத்தப்பட்ட நுகர்வுப்பொருட்களும்	10	3,000,278.95	2,843,155.99
பராமரிப்புச் செலவுகள்	11	445,336.78	357,896.18
தேய்மானம்		5,845,568.51	5,763,215.89
சேவைகள்	12	38,183,866.49	33,023,155.77
மொத்தச் செலவுகள்		**82,270,617.70**	**84,352,908.66**
உரிய காலப்பகுதிக்கான மேலதிகம் / பற்றாக்குறை		(5,466,061.25)	**3,052,908.66**

காணாமற்போனோருக்கான அலுவலகம்

2021 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றங்களிலான கூற்று

	திறைசேரியில் இருந்து மூலதன மானியம்	திரட்டப்பட்ட நிதிகள்	வருடத்திற்கான மேலதிகம்/(பற்றாக்குறை)	மொத்தம்
	(ரூ)	(ரூ)	(ரூ)	(ரூ)
01/01/2020 இல் ஆரம்ப மீதி	-	34,118,439.21	-	34,118,439.21
முந்தைய வருட சீரமைப்பு	-	(8,370,179.05)	-	(8,370,179.05)
திறைசேரியில் இருந்து மூலதன மானியம்	700,000.00	-	-	700,000.00
2020 இற்கான மேலதிகம் (பற்றாக்குறை)	-	-	(3,052,908.66)	(3,052,908.66)
31/12/2020 இல் மீதி	700,000.00	25,748,260.16	(3,052,908.66)	23,395,351.50
01/01/2021 இல் ஆரம்ப மீதி	-	23,395,351.50	-	23,395,351.50
முந்தைய வருட சீரமைப்பு	-	(166,623.39)	-	(166,623.39)
முந்தைய வருட மேலதிக (பற்றாக்குறை) சீரமைப்பு	-	6,000.00	-	6,000.00
திறைசேரியில் இருந்து மூலதன மானியம்	39,250.00	-	-	39,250.00
2021 இற்கான மேலதிகம் (பற்றாக்குறை)	-	-	(5,466,061.25)	(5,466,061.25)
31/12/2021 இல் மீதி	39,250.00	23,234,728.11	(5,466,061.25)	**17,807,916.86**

காணாமற்போனோருக்கான அலுவலகம்

31.12.2021 இல் பரீட்சை மீதி

